



# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

TIRUCHIRAPPALLI CITY CORPORATION
எங்கள் பணி தங்களுக்கே
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

கலைஞர் 100
1924 - 2023



## BUDGET : 2026-2027
## வரவு செலவுத் திட்டம்






பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி சந்தை கட்டும் பணி அடிக்கல் நாட்டுதல்



எடமலைப்பட்டிப்புதூர் மாநகராட்சி பள்ளிக்கட்டிடம் திறப்பு விழா

# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

## 2026-2027ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை
## வரவு செலவு திட்ட மதிப்பீடு

தமிழ்நாட்டில் வரலாற்று முக்கியத்துவமும், கணினி மென்பொருட்கள் துறையில் சமீப காலத்தில் அதிக வளர்ச்சி பெற்று வரும் திருச்சிராப்பள்ளி நகரத்தில், மாநகராட்சியால் மக்களுக்கு வழங்கப்படும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும், எதிர்கால நகரமயமாக்குதலைக் கருத்தில் கொண்டும், அதனால் ஏற்படும் புவி வெப்பமயமாதலை தடுக்க தேவையான வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதை கருத்தில் கொண்டும் இவ்வாண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மாநகராட்சியின் மொத்த பரப்பளவு | **167.23** சதுர கிலோமீட்டர் |
| 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி | **9.16** இலட்சம் |
| 2021ம் ஆண்டின் படி தோராய மக்கள் தொகை | **10.81** இலட்சம் |
| வார்டு குழு அலுவலகங்கள் | **5** |
| வார்டுகள் | **65** |



மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்

## 2025–2026ம் ஆண்டின் செயல்திறன் அறிக்கை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் 2025-26ம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட போது இருந்த நிதி நிலை குறித்தும், தற்பொழுது 2025-26ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடுகள் குறித்தும், மேற்கண்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் குறித்த விபரங்கள் கீழே விவரிக்கப் பட்டுள்ளன.

## 2025–2026ம் ஆண்டின் திட்ட மதிப்பீடு/திருத்திய மதிப்பீடு

(ரூபாய் கோடியில்)

| வருவாய்/குடிநீர் மற்றும் மூலதன நிதி | 2025-26ம் ஆண்டு திட்ட மதிப்பீடு | 2025-26ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு |
|---|---|---|
| வரவு | 1308.16 | 873.89 |
| செலவு | 1437.11 | 959.56 |
| உபரி/பற்றாக்குறை | (-) 128.95 | (-) 85.67 |

### கல்வி நிதி

(ரூபாய் கோடியில்)

| கல்வி நிதி | 2025-26ம் ஆண்டு திட்ட மதிப்பீடு | 2025-26ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு |
|---|---|---|
| வரவு | 25.30 | 23.67 |
| செலவு | 17.44 | 18.44 |
| உபரி | 7.86 | 5.23 |



# TIDEL PARK TRICHY LIMITED

தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியும் இணைந்து புதிதாக டைடல் பார்க் திருச்சி லிமிடெட் எனும் நிறுவனம் சுமார் ரூ.462.50 கோடி மதிப்பீட்டில் பஞ்சப்பூர் பகுதியில் அமையவுள்ளது.

இந்நிறுவனத்தில் பெறப்படும் இலாபம் 74.40 : 25.60 என்ற விகிதாச்சாரத்தில் பிரிக்கப்பட்டு, வருடந்தோறும் மாநகராட்சிக்கு வழங்கப்படும். இதன் மூலம் மாநகராட்சிக்கு ஒரு நிரந்தர வருவாய் ஆதாரம் உருவாக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி வரலாற்றில் இது ஒரு சாதனையாகும்.



## 2025–26ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகளின் விவரம்

1. மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் (பழைய வார்டு எண்.61 முதல் 65 வரை) குடிநீர் அபிவிருத்தித் திட்டம் KfW ஜெர்மானிய வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்துதல்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் 2011ல் சேர்க்கப்பட்ட திருவெறும்பூர் பேரூராட்சி, பாப்பாகுறிச்சி ஊராட்சி, எல்லக்குடி ஊராட்சி, கீழகல்கண்டார் கோட்டை ஊராட்சி மற்றும் ஆலத்தூர் ஊராட்சி, ஆகிய பகுதிகள் அடங்கிய 5 பழைய வார்டு (61, 62, 63, 64 மற்றும் 65) பகுதிவாழ் பொதுமக்களுக்கு CPHEEOன் நெறிமுறைகளின்படி நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்குவதற்கு, ஜெர்மானிய வங்கி நிதி உதவியின் கீழ் (KfW) ரூ.63.70 கோடி மதிப்பீட்டில் பணிகள் 3 தொகுப்புகளாக எடுத்து கொள்ளப்பட்டு, தொகுப்பு எண். 2 மற்றும் 3 ல் அடங்கும் பணிகள் முடிக்க பெற்று சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

தொகுப்பு எண்.2ல் 21.556 கி.மீ பிரதான குடிநீர் உந்துக் குழாய்கள் பதிக்கப் பட்டுள்ளது. தொகுப்பு எண்.3ல் புதிதாக 38.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட 8 எண்ணிக்கைகள் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளும், பழைய 3 எண்ணிக்கைகள் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளிலிருந்து குடிநீர் வழங்கும் வகையில் 211.711 கி.மீ குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு எண்.1ல் அடங்கும் நீர்சேகரிப்பு கிணறு மற்றும் நடைபாதை மேம்பாலம் அமைக்கும் பணிகள், சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்கார நிறுவனம் மூலம் முடிக்கப்பட்டு, 07.01.2026 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.



இத்திட்டத்தின் மூலம் 19343 வீட்டு குடியிருப்பு குடிநீர் இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டு, 88054 மக்கள் பயன் பெற உள்ளனர். இதுநாள் வரை இத்திட்டத்திற்கு ரூ.64.95 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 2. பாதாள சாக்கடை திட்டம் பகுதி – 2 (அம்ரூத் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி)

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 2011ல் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகள் மற்றும் விடுபட்ட பகுதிகளான பழைய வார்டு எண். 8,9, 10, 11, 12, 15, 16, 17, 18, 21, 24, 25, 26, 35, 40, 41, 42, 45, 54, – முழுவதும் வார்டு எண். 36, 37, 38, 43, 44 – பகுதியாகவும் ஆக மொத்தம் 24 வார்டு மக்கள் பயன்பெறும் வகையில் அம்ரூத் திட்டம் 2016-17ன் கீழ், ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் பகுதி 2 – ரூ. 377.29 கோடி மதிப்பீட்டில் 3 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டதில், தொகுப்பு எண்.3ல் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. தொகுப்பு எண்.1 மற்றும் 2ல் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது.

**இத்திட்டத்தின் நிதி ஆதாரம் பின்வருமாறு:**

(ரூபாய் கோடியில்)

| திட்டத்தின் பெயர் / திட்ட எண் | மதிப்பீட்டுத் தொகை | திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஒன்றிய அரசு மான்யம் | தமிழக அரசு மான்யம் | உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு | | |
| | | | | மாநகராட்சி நிதி | ஆசிய வங்கி நிதி | |
| | | | | | மான்யம் | கடன் |
| திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் வழங்குதல் (பகுதி II) | **377.29** | **172.00** | **68.80** | **43.11** | **55.54** | **37.84** |

**இத்திட்டத்தில்**

- 285.77 கி.மீ கழிவுநீர் சேகரக் குழாய்கள், 32.058 கி.மீ கழிவுநீர் உந்து குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. 11076 எண்கள் ஆள் நுழைவுத் தொட்டிகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. 6 எண்கள் கழிவுநீர் உந்து நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 37 எண்கள் கழிவுநீரேற்று நிலையங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 36469 எண்ணிக்கை பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் பணிகள் முழுமையாக முடிவுற்றுள்ளது.
- இதுநாள் வரை 99.41 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன.
- இத்திட்ட பணியானது 31.03.2026க்குள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.

## 3. பாதாள சாக்கடை திட்டம் பகுதி – 3 (அம்ரூத் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி)

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 2011ல் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளான பழைய வார்டு எண்.25,26,40,41,42,45,46,55,58,60,61,63 பகுதியாகவும் வார்டு எண். 57, 59, 62, 65– முழுவதுமாகவும் ஆக மொத்தம்-16 வார்டு மக்கள் பயன்பெறும் வகையில் அம்ரூத் திட்டத்தின் கீழ், ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் பகுதி 3, தொகை ரூ. 330.31 கோடி மதிப்பீட்டில் ஒரே தொகுப்பாக பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், பாதாள சாக்கடை திட்ட பணி ஒப்பந்தக்காரர் மூலம் 90.57 %முடிவடைந்துள்ள நிலையில்,பிறதுறைகளிடமிருந்து கழிவுநீர் குழாய் பதிக்க அனுமதி, சரக்கு மற்றும் சேவை வரி (GST), Price Variation, ஆகியவைகளில் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளதால் திட்ட பணியினை குறிப்பிட்ட காலத்திற்கு முடிக்க வேண்டிய காரணத்தினால் கூடுதல் மதிப்பீடு தொகை ரூ.425.72 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி அரசாணை (நிலை) எண்.195 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.17.10.2024ல் வழங்கப்பட்டுள்ளது. நிதி ஆதாரம் பின்வருமாறு.

அட்டவணை எண். 3

(ரூபாய் கோடியில்)

| திட்டம் பெயர் | ஒன்றிய அரசு மான்யம் | மாநில அரசு மான்யம் | மாநகராட்சி பங்களிப்பு | ஆசிய வளர்ச்சி வங்கி கடன் (ADB) | ஆசிய வளர்ச்சி வங்கி மான்யம் | TUFIDCO (கடன்) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் (பகுதி-3) | **132.06** | **52.82** | **66.19 (40.78 + 25.41)** | **49.96** | **54.69** | **70.00** | **425.72** |

இத்திட்டத்தில்

- 302.283 கி.மீ நீள கழிவுநீர் சேகரக் குழாய்களில் 299.517 கி.மீ நீள கழிவுநீர் சேகரக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன.
- 30.390 கி.மீ நீள கழிவுநீர் உந்துகுழாய்களில் 31.184 கி.மீ நீள கழிவுநீர் உந்துக்குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன.
- 12016 எண்கள் ஆள்நுழைவுத் தொட்டிகளில் 12004 எண்கள் ஆள்நுழைவுத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 6 கழிவுநீர் உந்து நிலையங்கள் முடிக்கப்பட்டுள்ளது.
- 24 எண்கள் கழிவுநீரேற்று நிலையங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மின்மோட்டார் பொருத்தும் பணி நடைபெற உள்ளது.

➢ 38061 எண்ணிக்கை பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கும் பணியில், 37499 எண்கள் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

➢ இத்தொகுப்பில் 96.55 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன.

➢ இத்திட்ட பணியானது மார்ச் 2026க்குள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.




## 4. விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் ( Phase IV) – அம்ருத் 2.O

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பாதாள சாக்கடை வசதி விடுபட்ட பகுதிகளுக்கு சுமார் 140.00 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு (Phase IV) அம்ரூத் 2.O (2023-24) திட்டத்தின் கீழ், அரசாணை எண். 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 02.09.2023ல் ரூ.221.39 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

(ரூபாய் கோடியில்)

| திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம் | | |
|---|---|---|---|---|
| | | ஒன்றிய அரசு மான்யம் | தமிழக அரசு மான்யம் | உள்ளாட்சி / பிற நிறுவன நிதி ஆதார பகிர்வு |
| விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் பணி (Phase IV) | **221.39** | **73.06** | **66.42** | **81.91** |

AMRUT 2.O திட்ட நெறிமுறைகளின் படி செயல்படுத்திடவும், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி, சென்னை அவர்களின் கடிதம் எண். TNUDF/Projects/SMIF-TN-III/Trichy UGSS – Phase IV, நாள். 30.11.2023ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் படி, திருத்திய மதிப்பீடு ரூ. 230.61 கோடிக்கு கீழ்க்கண்ட நிதி ஆதாரங்களின்படி மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஒன்றிய அரசு மானியம் | தமிழக அரசு மானியம் | ஜெர்மானிய வங்கி நிதி (Kfw) | |
| | | | | மான்யம் | கடன் |
| விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் பணி (Phase IV) | **230.61** | **73.06** | **66.42** | **45.56** | **45.57** |

- மேற்படி, திட்ட பணிக்கு 30.05.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு. ரூ. 235.06 கோடிக்கு (5 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் உட்பட) 26.10.2024 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு,பணிகள் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில்

- 143.650 கி.மீ நீளம் கழிவுநீர் சேகரக் குழாய்களில் 39.531 கி.மீ நீள கழிவுநீர் சேகரக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 104.119 கிமீ கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்படவுள்ளன.
- 30.080 கி.மீ நீள கழிவுநீர் உந்துகுழாய்களில் 5.814 கி.மீ நீள கழிவுநீர் உந்துக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 29.266 கி.மீ கழிவுநீர் உந்துக் குழாய்கள் பதிக்கப்படவுள்ளன.
- 5872 எண்கள் ஆள்நுழைவுத் தொட்டிகளில் 1976 எண்கள் ஆள்நுழைவுத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 9 கழிவுநீர் உந்து நிலையங்களில் 7 பணிகள் நடைபெற்று வருகிறது.
- 16 எண்கள் கழிவுநீரேற்று நிலையங்களில் 13 எண்கள் கட்டுமான பணிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.
- 16500 எண்ணிக்கை பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கும் பணியில், 4642 எண்கள் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- இத்தொகுப்பில் 18.79 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன.
- இத்திட்ட பணியானது ஆகஸ்ட் 2027க்குள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இத்திட்டத்தில் அடங்கும் வார்டு எண்.8,25,46,55,56,63,64 மற்றும் 65க்குட்பட்ட (லிங்க நகர், உய்யகொண்டான் திருமலை, பிராட்டியூர், ஓலையூர் மற்றும் பசுமை நகர் ஆகிய பகுதிகள்) பகுதிகளில், இப்பணியானது ஆகஸ்ட்டு 2027 க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

## 5. பஞ்சப்பூரில் (100 MLD) நவீன முறையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் - SBR Technology (100 MLD)

- திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் 4, வார்டு எண்.62க்குட்பட்ட பஞ்சப்பூரில் மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 574.38 ஏக்கர் நிலப்பரப்பில், 247.50 ஏக்கரில். தேசிய நதி நீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் (NRCP) 58.64 MLD கொள்ளளவில் Waste Stabilization Pond முறையில் ஏற்கனவே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.
- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடங்களை ஆய்வு செய்த போது, Waste Stabilisation Pond முறையில் சுத்திகரிப்பு செய்வதால், அதிகளவு இடம் பயன்படுத்த வேண்டியுள்ளதாலும், எதிர்கால மக்கள் தொகையை கருத்தில் கொண்டு, புதிய நவீன தொழில்நுட்ப முறையில் (SBR Technology) 100 MLD கொள்ளளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு அரசாணை (நிலை)எண். 54 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 02.05.2023ல் ரூ.216.20 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.
- இப்பணிக்கு கடன் மற்றும் மான்யம் பெறும் பொருட்டு திருத்திய நிர்வாக அனுமதி அரசாணை எண். 36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 06.03.2024ல் ரூ.233.87 கோடிக்கு வழங்கப்பட்டது.
- இத்திட்டத்தில் 58 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன. இதுநாள் வரை ரூ.118.79 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் மூலம் 50 வார்டுகளிலிருந்து உருவாகும் கழிவுநீர் சுத்திகரிக்கப்படும்.
- இத்திட்டம் 2026ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.



## 6. மூலதன நிதி (Capital Grant Fund 2022 -23 )

இத்திட்டத்தின் கீழ், ரூ. 2.10 கோடி மதிப்பீட்டில், குழுமிக்கரை பகுதியில் நவீன எரிவாயு தகன மேடை கட்டும் பணிக்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தற்பொழுது அனைத்துப் பணிகளும் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. ரூ. 1.78 கோடி செலவிடப்பட்டுள்ளது

மேலும், ரூ. 24.30 கோடி மதிப்பீட்டில் கொல்லாங்குளத்தை (கருமண்டபம் பகுதி மற்றும் எடமலைப்பட்டிபுதூர் பகுதி) மேம்படுத்தி, அழகுப்படுத்தும் பணிகளுக்கு, நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ. 2.31 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஸ்ரீரங்கம் பகுதி வாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஸ்ரீரங்கத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் பணியினை, ரூ. 11.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு அரசாணை (நிலை) எண். 562 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா.5) துறை நாள்: 26.09.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து, ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, 08-01-2026 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு, தற்பொழுது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.



இப்பணிக்கான நிதியாதாரம் கீழ்க்கண்டவாறு

(ரூபாய் கோடியில்)

| மூலதன மான்ய நிதி 2022–2023 | மாநகராட்சி பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|
| 7.77 | 3.33 | 11.10 |

## 7. அம்ரூத் 2.0

### அ. குடிநீர் விநியோகம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பரீட்சார்த்த முறையில் வார்டு எண்.51, 52, 53, 54, 55, 56 ஆகிய வார்டுகளுக்கு 24 x 7 குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கு திருத்திய மதிப்பீடு ரூ.38.49 கோடியில், TNCRUDP நிதியுதவியுடன் செயல்படுத்த அரசாணை எண். 71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.05.2024ல் அனுமதி வழங்கியுள்ளது.

நிதி ஆதாரம் விவரம் பின்வருமாறு.

(ரூபாய் கோடியில்)

| மத்திய அரசு மான்யம் | மாநில அரசு மான்யம் | TNUDF கடன் | மொத்தம் |
|---|---|---|---|
| 11.54 | 10.39 | 16.56 | **38.49** |

இத்திட்டமானது கண்டோன்மெண்ட், ஜங்ஷன், பொன்னகர், ஜெயா நகர், விஸ்வாஸ் நகர், கருமண்டபம், சொசைட்டி நகர் (IOB காலனி) ஆகிய பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட திட்ட பணிக்கு 05.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தக்காரருக்கு ரூ. 35.84 கோடியில் பணி மேற்கொள்வதற்கு (Including 5 Year O&M) 15.10.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- இத்திட்டத்தில், அடங்கும் பணிகள் விவரம் பின்வருமாறு.
  - குடிநீர் விநியோகக் குழாய்கள் பதித்தல் – 100.697 கி.மீ
  - குடிநீர் உந்துக் குழாய்கள் பதித்தல் – 1.10 கி.மீ
  - புதிதாக மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுதல் (5.00 இலட்சம் லிட்டர் – 1 எண்- நட்சத்திரா நகர்)
  - DMA zonation அமைத்தல் – 9 Zones (8 ஏற்கனவே உள்ள OHT + 1 புதிய OHT)
  - குடிநீர் வீட்டிணைப்புகள் -14819 எண்கள்
  - SCADA அமைப்புகள்

இத்திட்டத்தின் கீழ் 19.51 MLD (2055-ultimate) குடிநீர் தினசரி 24 மணி நேரமும் பெறும் வகையிலும், 125902 பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 69 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது வரை ரூ. 11.30 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டப் பணியானது செப்டம்பர் 2026க்குள் முடிக்க பெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

## 8. மூலதன மான்யநிதி (Capital Grant Fund 2023 -24 )

அ) மூலதன மான்ய நிதி (Phase-IV) கீழ், ரூ. 4.77 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, கீழ்க்கண்ட பகுதிகளில் 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ. 3.10 கோடி செலவிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூ. கோடியில்) | பணி முன்னேற்ற சதவீதம் |
|---|---|---|---|
| 1. | வார்டு எண். 25 க்குட்பட்ட சண்முகா நகர் பகுதியில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி புனரமைக்கும் (reconstruction) பணி | 1.39 | 95% |
| 2. | வார்டு எண். 25 க்குட்பட்ட M M நகர் பகுதியில் புதிதாக 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணி | 1.67 | 85% |
| 3. | வார்டு எண். 26 க்குட்பட்ட கல்லாங்காடு பகுதியில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி புனரமைக்கும் (reconstruction) பணி | 1.71 | 98% |
| | மொத்தம் | 4.77 | |









ஆ) மூலதன மான்ய நிதி (Phase-VI)ன் கீழ், ரூ. 2.03 கோடிக்கு வார்டு எண்.62க்குட்பட்ட பஞ்சப்பூர் பகுதியில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

| நிதியாதாரம் (ரூ. கோடியில்) | | |
|---|---|---|
| மான்யம் | மாநகராட்சி பங்களிப்பு | மொத்தம் |
| 1.00 | 1.03 | 2.03 |

தற்பொழுது 90 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் வரும் 31.05.2026க்குள் முடிக்கப் பெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இதுநாள் வரை ரூ.1.81 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 9. இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிரவல் மான்ய நிதி (O&MGapFilling Fund 2023-24 )

இத்திட்டத்தின் கீழ், ரூ. 2.50 கோடிக்கு கீழ்க்கண்ட பணிகள் எடுத்து கொள்ளப் பட்டுள்ளது.

(ரூ. கோடியில்)

| வ. எண். | பணிகளின் பெயர் | மதிப்பீடு | செலவினம் |
|---|---|---|---|
| 1. | பாதாள சாக்கடை உந்து நிலையங்களில் மின்மோட்டார்கள் (60 HP - 01 No / 80 HP – 2 Nos./ 300 HP – 1 No.) பொருத்தி இயக்கும் பணி. | 1.30 | 1.29 |
| 2. | ஆளவந்தான் படித்துறை நீரேற்று நிலையத்தில் 150 குதிரை திறன் கொண்ட டர்பைன் மின்மோட்டார் பொருத்தி இயக்கும் பணி. | 1.20 | 1.19 |
| | மொத்தம் | **2.50** | **2.48** |

மேற்கண்ட மின்மோட்டார்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை இப்பணிகளுக்கென ரூ.2.48 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

## 10. தெருவிளக்குகள்

ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) யின் கீழ், அமைக்கப்பட்ட மின் சக்தி சேமிப்பு திறன் கொண்ட எல்.இ.டி தெருவிளக்குகள் பராமரிக்கும் பணி.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஐந்து மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) - பொது / தனியார் பங்களிப்பு PPP (Public Private Partnership) முறையில் 40 வாட்ஸ் குழல் விளக்குகள் - 27915 எண்கள் 20 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் மின் ஆற்றல் தணிக்கை செய்தல் மற்றும் மின் சக்தி சேமிப்பு உபகரணங்களை பொருத்தி, இயக்கி பராமரிக்கும் பணிகளை, பத்தாண்டுகள் மேற்கொள்ள தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு,பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### அ) தெருவிளக்குகளின் விபரம்

| வ. எண். | தெருவிளக்குகளின் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 20 W எல்.இ.டி மின்விளக்குகள் | 28973 |
| 2. | 40 W எல்.இ.டி மின்விளக்குகள் | 8221 |
| 3. | 72 W எல்.இ.டி மின்விளக்குகள் | 21 |
| 4. | 90 W எல்.இ.டி மின்விளக்குகள் | 10770 |
| 5. | 120 W எல்.இ.டி மின்விளக்குகள் | 3846 |
| 6. | 150 எல்.இ.டி மின்விளக்குகள் | 178 |
| 7. | 200 எல்.இ.டி மின்விளக்குகள் | 594 |
| 8. | சூரிய ஒளி மின் விளக்குகள் | 78 |
| | மொத்தம் | **52681** |

### ஆ) உயர்கோபுர மின்விளக்குகள்

| | | |
|---|---|---|
| 1. | 10 மீட்டர் உயர் கோபுர மின் விளக்குகள் | 33 |
| 2. | 12 மீட்டர் உயர் கோபுர மின் விளக்குகள் | 3 |
| 3. | 16 மீட்டர் உயர் கோபுர மின்விளக்குகள் | 65 |
| 4. | 30 மீட்டர் உயர் கோபுர மின்விளக்குகள் | 3 |
| | மொத்தம் | **104** |



**11. மாநில நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (SUIDF)**

மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (SUIDF) கீழ் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட மற்றும் தெருவிளக்குகள் விடுபட்ட பகுதிகளில் மொத்தம் 6264 எண்கள் எல்.இ.டி மின் விளக்குகள் ரூ.13.97 கோடி மதிப்பீட்டில் பொருத்தப்பட்டு பணி நிறைவு பெற்றுள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் மூலம் ரூ. 12.57 கோடி கடனாக வரப்பெற்றதில், இந்நாள் வரை ரூ. 12.25 கோடி செலவாகியுள்ளது.

**12. தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டம் 2023-24 (NUHM)**

இத்திட்டத்தின் கீழ், தலா ரூ. 120.00 இலட்சம் மதிப்பீட்டில் 4 எண்ணிக்கையில் புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 1 பணி முடிவுற்று, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது மற்றும் தலா ரூ. 0.60 கோடி மதிப்பீட்டில், 2 எண்ணிக்கையில் கூடுதல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தற்போது பணிகள் முடிவுற்றது. மேலும், இத்திட்டத்தின் கீழ், தலா ரூ. 0.30 கோடி மதிப்பீட்டில், 10 எண்ணிக்கையில் துணை சுகாதார மையங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, 9 பணிகள் முடிவுற்று 1 பணி நடைபெற்று வருகிறது. ஆக மொத்தம், ரூ. 6.78 கோடி இப்பணிகளுக்கு செலவிடப்பட்டுள்ளது

**13. மூலதன நிதி (Capital Grant Fund 2023 -24 )**

1. இத்திட்டத்தின் கீழ், ரூ. 1.60 கோடி மதிப்பீட்டில் பிராட்டியூர் பகுதியில் நவீன எரிவாயு தகன மேடை கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம், நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தற்பொழுது பணிகள் முடிவுற்று. இப்பணிக்கு ரூ. 1.57 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 08-01-2026 அன்று திறக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

2. இத்திட்டத்தின் கீழ் அண்ணா ஸ்டேடியம் ரேஸ்கோர்ஸ் சாலையில் நடைமேடை திரும்ப கட்டும் பணி, திறந்த வெளி உடற்பயிற்சி கூடம், செயற்கை நீரூற்று, பார்வையற்றோர் உணரும் வகையிலான சிலை, மாற்று திறனாளிகளுக்கான உடற்பயிற்சி கூடம், வண்ண செடிகள் போன்றவை அமைக்கும் பணிகளை ரூ. 7.52 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம், நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தற்பொழுது அனைத்துப் பணிகளும் முடிவுற்று, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இப்பணிக்கென இது வரை ரூ.6.77 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## 14. மூலதன நிதி (Capital Grant Fund 2024-25 )

பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனைய வளாகத்தின் அருகே, சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் வெளியூர் செல்லும் தனியார் சொகுசு பேருந்து நிலையம் (OMNI Bus Stand) ரூ.17.60 கோடி (மூலதன மான்ய நிதி ரூ.8.80 கோடி மற்றும் மாநகராட்சி நிதி ரூ.8.80 கோடி) மதிப்பீட்டில் அமைப்பதற்கு, அரசாணை எண்.503 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2024ல் நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிவுற்று 07.01.2026ம் தேதியன்று, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.



**15.** SFC ஊக்க நிதி 2024-25

I) பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் பயணிகள் காத்திருக்கும் அறை குளிரூட்டும் பணி.

பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் குளிரூட்டும் சாதனங்கள் அமைக்கும் பணியினை ரூ.9.18 கோடி மதிப்பீட்டில் (SFC ஊக்க நிதி ரூ.5.00 கோடி மற்றும் மாநகராட்சி நிதி 2024-25ன் கீழ் ரூ.4.18 கோடி) மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு, வேலை உத்திரவு வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிவுற்று 09.05.2025ம் தேதியன்று திறப்பு விழா காணப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

II) விளையாட்டு மையம் - தொகுப்பு-I

வார்டு எண்.28, அண்ணாநகர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாக பகுதியில் விளையாட்டு மையம் அமைக்கும் பணியினை ரூ.3.56 கோடி மதிப்பீட்டில் (SFC ஊக்க நிதி ரூ.2.27 கோடி மற்றும் மாநகராட்சி நிதி 2024-25ன் கீழ் ரூ.1.29 கோடி) மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதியும் மற்றும் முதன்மை பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, வேலை உத்திரவு வழங்கப்பட்டு, தற்பொழுது பணிகள் நடைபெற்று வருகிறது.

III) விளையாட்டு மையம் - தொகுப்பு-II

வார்டு எண். 28 அண்ணாநகர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாக பகுதியில் Gazebo அமைப்புடன் கூடிய உள் மற்றும் வெளிப்புற விளையாட்டு வசதிகளுக்கான விளையாட்டு மையம் அமைக்கும் பணியினை ரூ.1.95 கோடி மதிப்பீட்டில் (SFC ஊக்க நிதி ரூ.1.24 கோடி மற்றும் மாநகராட்சி நிதி 2024-25ன் கீழ் ரூ.0.71 கோடி) மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகளின் படி நிர்வாக அனுமதியும் மற்றும் முதன்மை பொறியாளர் அவர்களின் செயல்முறைகளின் படி தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, வேலை உத்திரவு வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது.



## IV) புறவழிச்சாலை - தொகுப்பு – I – KfW (SMIF-TN-III) நிதி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நகரப்பகுதிக்குள் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு, பஞ்சப்பூர் முதல் கோணக்கரை வரை, கோரையாறு மற்றும் உய்யகொண்டான் ஆறுகளின் கிழக்கு கரை பகுதியில் புறவழிச்சாலை அமைக்கும் பணியினை மூன்று தொகுப்புகளாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பஞ்சப்பூர் முதல் கருமண்டபம் வரையிலான (பிரிவு-I) புறவழிச்சாலை அமைக்கும் பணியினை ரூ. 81.72 கோடி மதிப்பீட்டில் (KfW (SMIF-TN-III) மான்யம் ரூ. 29.92 கோடி, KfW (SMIF-TN-III) கடன் ரூ. 29.93 கோடி, 15வது CFC நிதிக்குழு மான்யம் ரூ. 5.00 கோடி மற்றும் மாநகராட்சி நிதி 2024-25ன் கீழ் ரூ. 16.87 கோடி) மேற்கொள்வதற்கு, அரசாணை எண்.151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி.5) துறை நாள்.24.10.2024ல் நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 27.12.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு, தற்பொழுது 25 சதவீதம் பணிகள் முடிவுற்றுள்ளது.



## V) புறவழிச்சாலை - தொகுப்பு – II - SUIDF கடன்

உறையூர் முதல் கோணக்கரை கரூர் புறவழிச்சாலை வரையிலும் (பிரிவு-II) புறவழிச்சாலை அமைக்கும் பணியினை ரூ. 68.00 கோடி மதிப்பீட்டில் (மாநில நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் கடன் ரூ.53.00 கோடி மற்றும் மாநகராட்சி நிதி 2024-25ன் கீழ் ரூ.15.00 கோடி) மேற்கொள்வதற்கு, அரசாணை எண்.109 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி.2) துறை நாள்.16.08.2024ல் நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 28.10.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு, தற்பொழுது 5 சதவீதம் பணிகள் முடிவுற்றுள்ளது.

## VI) புறவழிச்சாலை - தொகுப்பு – III – I & A Grant and SUIDF கடன்

கருமண்டபம் முதல் உறையூர் வரையிலான (பிரிவு-III) புறவழிச்சாலை அமைக்கும் பணியினை ரூ.334.00 கோடி மதிப்பீட்டில் (I&A grant and SUIDF Loan) மேற்கொள்ள அரசின் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு, கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

## 16. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி TURIP - 2023-24

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.4548/2023/எஸ்எஸ்1 நாள்.31.05.2023ல் ரூ.103.73 கோடி மதிப்பீட்டில் (முழு மான்யம் ரூ.103.73 கோடி) சாலை பணிகள் 82 தொகுப்புகளில் 1706 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தற்போது, 1368 பணிகள் ரூ.99.10 கோடி செலவில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது, (338 பணிகள் கைவிடப்பட்டுள்ளது)

## 17. உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டம் : 2024 -25

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண். 3 , வார்டு எண். 4 6 க்குட்பட்ட பொன்மலைப்பட்டி பகுதியில் வசிக்கும் மக்கள் சுபநிகழ்ச்சிகள் நடத்துவதற்கு போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், அப்பகுதியில் வசிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்காக உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ்,புதிய சமுதாயக் கூடம் கட்டும் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.46க்குட்பட்ட பொன்மலைப்பட்டி மெயின் ரோடு பகுதியில் புதிய சமுதாயக் கூடம் கட்டும் பணி | **6.10** |

மேற்கண்ட திட்ட பணியினை மேற்கொள்வதற்கு, SFC Incentive Fund 2024-25 ன் கீழ் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 23045/2023/SS2 நாள்.24.10.2024ல் ரூ.1.86 கோடிக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 18484/2023/DO1 நாள்.08.11.2024ல் ரூ.1.86 கோடிக்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, மேற்படி திட்ட பணிக்கு, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 189/2024-25ன் வாயிலாக 26.11.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு, தற்பொழுது பணிகள் நடைபெற்று வருகிறது. இது வரை இப்பணிக்கென ரூ.58.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 50 சதவீதப் பணிகள் முடிவுற்றுள்ளது.

## 18. ஆறாவது மாநில நிதிக்குழு – சுற்றுலா வளர்ச்சி நிதி 2024-25

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண். 3 , வார்டு எண். 4 0 க்குட்பட்ட திருவெறும்பூர் பகுதியில் வசிக்கும் மக்களின் நலனுக்காகவும், சுற்றுப்புற பகுதியில் வசிக்கும் கிராமப்புற மக்களுக்காகவும், திருவெறும்பூர் பகுதியில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண். 40க்குட்பட்ட திருவெறும்பூர் பகுதியில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி | **6.10** |

மேற்கண்ட திட்ட பணியினை மேற்கொள்வதற்கு, 6th SFC – Grants for Tourism Towns 2024-25 & 2025-26 நிதியின் கீழ், ரூ.6.10 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 18484/2023/DO1 நாள்.05.12.2025ல் ரூ.6.10 கோடிக்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, மேற்படி திட்ட பணிக்கு, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 347/2025-26ன் வாயிலாக 02.01.2026 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது.



## 19. நமக்கு நாமே திட்டம் 2023-2024

நமக்கு நாமே திட்டத்தின் கீழ், அரசு மான்யம் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் கூடிய 14 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டதில் 13 பணிகள் முடிவுற்றுள்ளது. மீதம் ஒரு பணி நடைபெற்று வருகிறது.

## 20. நமக்கு நாமே திட்டம் 2024-2025

நமக்கு நாமே திட்டத்தின் கீழ், அரசு மான்யம் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் கூடிய 20 பணிகள் ரூ. 2.24 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டதில் அனைத்துப் பணிகளும் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

## 21. நமக்கு நாமே திட்டம் 2025-2026

நமக்கு நாமே திட்டத்தின் கீழ், அரசு மான்யம் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் கூடிய 23 பணிகள் ரூ. 5.28 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டதில் 1 பணி முடிக்கப்பட்டு 17 பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 5 பணிகள் நிர்வாக அனுமதி பெறும் நிலையில் உள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | அரசு மான்யம் | பொது மக்களின் பங்களிப்பு |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண். 30க்குட்பட்ட தென்னூர் மேம்பாலத்தில் விழிப்புணர்வு ஓவியங்கள் வரையும் பணி | 12.00 | 8.00 | 4.00 |
| 2. | வார்டு எண். 17க்குட்பட்ட பி.எஸ். காலனி சாலையில் மழைநீர் வடிகால் சீரமைப்பு, குறுக்குப் பாலம் மற்றும் தார்சாலை அமைக்கும் பணி | 20.00 | 13.33 | 6.67 |
| 3. | வார்டு குழு அலுவலகம் எண்5-க்குட்பட்ட தென்னூர் மேம்பாலத்தில் விழிப்புணர்வு ஓவியங்கள் வரையும் பணி | 21.00 | 14.00 | 7.00 |
| 4. | வார்டு குழு அலுவலகம் எண்5-க்குட்பட்ட தென்னூர் மேம்பாலம் சேவைச்சாலை ( கிழக்குப் பகுதியில்) மைய சுடுகலவை இயந்திரத்துடன் பேவர் பினிசர் மூலம் தார்சாலை மேம்படுத்தும் பணி | 24.60 | 16.40 | 8.20 |
| 5. | வார்டு எண். 33க்குட்பட்ட எடத்தெரு மெயின் ரோடு பகுதியில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி | 2.40 | 1.60 | 0.80 |
| 6. | வார்டு எண். 43க்குட்பட்ட காவேரி நகர் பகுதியில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிகள் | 6.00 | 4.00 | 2.00 |
| 7. | வார்டு எண்.61க்குட்பட்ட தந்தை பெரியார் கல்லூரியில் முன்னாள் மாணவர் கூட்டரங்கம் கட்டும் பணி | 90.00 | 60.00 | 30.00 |
| 8. | வார்டு எண்.54க்குட்பட்ட ப்ரண்ட்ஸ் என்கிளேவ் விஸ்தரிப்பு பகுதியில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 49.50 | 33.00 | 16.50 |
| 9. | வார்டுக்குழு - 5 , தென்னூர் அண்ணாநகர் முதல் மற்றும் இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள மைதானத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்து பராமரிக்கும் பணி | 12.00 | 8.00 | 4.00 |
| 10. | வார்டுக்குழு -3,வார்டு எண். 41க்குட்பட்ட சந்தோஷ் நகர் பூங்கா பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 6.00 | 4.00 | 2.00 |
| 11. | வார்டுக்குழு - 5 க்குட்பட்ட ஜல்லிக்கட்டு சாலையில் அமைந்துள்ள பூங்கா மேம்படுத்தும் பணி | 8.10 | 5.40 | 2.70 |
| 12. | வார்டுக்குழு - 3, வார்டு எண். 35க்குட்பட்ட அப்பல்லோ மருத்துவமனை அருகில் பயணியர் நிழற்குடை அமைக்கும் பணி | 16.00 | 10.67 | 5.33 |

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | அரசு மான்யம் | பொது மக்களின் பங்களிப்பு |
|---|---|---|---|---|
| 13. | வார்டுக்குழு - 1, வார்டு எண். 12க்குட்பட்ட பழைய கரூர் சாலை கொசமேட்டுத் தெரு பகுதியில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி | 3.00 | 2.00 | 1.00 |
| 14. | வார்டுக்குழு - 1, வார்டு எண். 12க்குட்பட்ட பழைய கீழச் சிந்தாமணி (கோரிமேட்டுத் தெரு) பகுதியில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி | 3.00 | 2.00 | 1.00 |
| 15. | வார்டுக்குழு - 1, வார்டு எண். 15க்குட்பட்ட சஞ்சீவிநகர், நேரு தெரு பகுதியில் உள்ள ஆண்டாள் கார்டன் மனைப்பிரிவில் புதைவடிகால் இணைப்பு வழங்கும் பணி | 10.25 | 6.83 | 3.42 |
| 16. | வார்டுக்குழு - 1, வார்டு எண். 15க்குட்பட்ட சஞ்சீவிநகர், நேரு தெரு பகுதியில் உள்ள ஆண்டாள் கார்டன் மனைப்பிரிவில் குடிநீர் இணைப்பு வழங்கும் பணி | 1.55 | 1.03 | 0.52 |
| 17. | வார்டுக்குழு - 1 , வார்டு எண். 1 க்குட்பட்ட முத்துநகர் பகுதியில் பூங்கா அமைக்கும் பணி | 30.00 | 20.00 | 10.00 |
| 18. | வார்டுக்குழு - 4, வார்டு எண். 65க்குட்பட்ட அன்பில் நகர் பகுதியில் பேருந்து நிறுத்தம் கட்டும் பணி | 7.23 | 4.82 | 2.41 |
| 19. | வார்டுக்குழு - 4, வார்டு எண். 62க்குட்பட்ட முத்தமிழறிஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் Boom Barrier அமைந்துள்ள பகுதிக்கு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணி மற்றும் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள கேமராக்களுக்கான சேமிப்புத் திறனை அதிகரிப்பு செய்யும் பணி | 59.40 | 39.40 | 20.00 |
| 20. | வார்டுக்குழு - 4, வார்டு எண் 62க்குட்பட்ட முத்தமிழறிஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் உள்ள இருசக்கர வாகன நிறுத்தத்தில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணி | 59.40 | 39.50 | 20.00 |
| 21. | வார்டுக்குழு -5, வார்டு எண் 22க்குட்பட்ட தில்லை நகர் பிரதான சாலையின் இருபுறமும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் மராமத்து செய்யும் பணி | 39.00 | 26.00 | 13.00 |
| 22. | வார்டுக்குழு - 1, வார்டு எண்-4க்குட்பட்ட அம்பேத்கார் நகர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 22.20 | 15.46 | 6.74 |
| 23. | வார்டுக்குழு - 5, வார்டு எண். 23க்குட்பட்ட புத்தூர் ஆஞ்சநேயர்புரம் மற்றும் தெற்கு திரௌபதியம்மன் கோயில் தெருக்களில் குடிநீர் பகிர்மானக் குழாய் பதிக்கும் பணி | 1.50 | 1.00 | 0.50 |
| | **மொத்தம்** | **504.23** | **336.44** | **167.79** |

## 22. ஒருங்கிணைந்த பேருந்து முனையம் - I & A நிதி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டும் பணி, பல்வகை பயன்பாடுகள் மற்றும் வசதிகளுக்கான மையம், கனரக சரக்கு வாகன முனையம் கட்டும் பணி, சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு, முதற்கட்ட அனுமதி, அரசாணை (டி) எண்.497 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.28.12.2021ல் வழங்கப்பட்டது.

மேற்கண்ட திட்டப்பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை பின்வருமாறு தயார் செய்யப்பட்டதில், அரசாணை (நிலை) எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.சி.2) நாள்.23.06.2022ல் நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, தொடர் நடவடிக்கை மேற்கொண்டு 10.10.2022 அன்று கட்டுமானப்பணிகள் துவங்கப்பட்ட நிலையில், கூடுதல் பணிகளை மேற்கொள்வதற்கு, அரசாணை எண்.134 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.சி.5) நாள்.17.10.2024ல் பின்வருமாறு திருத்திய நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டதில் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் மற்றும் பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையம் ஆகிய திட்டப்பணிகள் 09.05.2025ம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

| வ. எண். | திட்டப்பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ. கோடியில்) | திருத்திய மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டும் பணி மற்றும் பல்வகை பயன்பாடுகள் மற்றும் வசதிகளுக்கான மையம் கட்டும் பணி (Multi Utility Facilities Centre). | 243.78 | 381.58 |
| 2. | பஞ்சப்பூரில் கனரக சரக்கு வாகன முனையம் கட்டும் பணி (Truck Terminal) மற்றும் சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள். (Roads, SWD and other Infrastructure facilities) வழங்கும் பணி | 106.20 | 110.97 |
| | மொத்தம் | **349.98** | **492.55** |










பல்வகை பயன்பாடுகள் மற்றும் வசதிகளுக்கான மையம் கட்டும் பணி
(Multi Utility Facilities Centre).

பல்வகை பயன்பாடுகள் மற்றும் வசதிகளுக்கான மையம் கட்டும் பணிகள் 90 சதவீதம் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இது வரை ரூ.432.31 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 23. மாரீஸ் தியேட்டர் அருகில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், வார்டு எண்.13க்குட்பட்ட கோட்டை ஸ்டேஷன் சாலையினையும், வார்டு எண்.11க்குட்பட்ட உறையூர் செல்லக்கூடிய சாலையினையும் இணைக்கும் கோட்டை புகைவண்டி நிலைய, இருப்புப்பாதை மேம்பாலம் 1866-ஆம் ஆண்டு கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இப்பாலம் கட்டப்பட்டு 151 வருடங்கள் கடந்துவிட்டதால், போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் இல்லை எனவும், இந்த இருப்புப்பாதை மேம்பாலத்தில், அதிகளவு கனரக வாகனங்களும், இலகுரக வாகனங்களும் சென்று வருவதால், இப்பாலத்தினை விரிவாக்கம் செய்து, அணுகு சாலை அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு தென்னக இருப்புப் பாதை நிர்வாகமும், மாநகராட்சியும் 50: 50 சதவீதத்தில் பங்கீடு செய்து கொள்வதற்கு தென்னக இருப்புப்பாதை, சென்னை அவர்களின் கடிதம் எண். W.352/T/149நாள். 07.06.2018ம் தேதியில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பணியினை, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.33090/2019/டிபி3, நாள்.02.01.2020ல் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் (Infrastructure & Amenities Fund) நிதியின் கீழ் மேற்கொள்ளுமாறு அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மண்டலம் 1, வார்டு எண்.13க்குட்பட்ட மாரீஸ் தியேட்டர் அருகில் இருப்புப்பாதை மேம்பாலம் கட்டும் பணியினை (Rail Over Bridge) ரூ.34.10 கோடி திட்ட மதிப்பீட்டில், முழு மான்யத்துடன் மேற்கொள்வதற்கு, அரசாணை நிலை எண்.27 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.22.02.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 579/2022-23 நாள்.05.04.2023 வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தக்காரருக்கு 28.07.2023 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது. மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளில் இதுவரை 76.00 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் இதுநாள் வரை ரூ.16.11 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## 24. SBM 2.0 திட்டம் - தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2023-2024

### அ. பொதுக்கழிப்பிடம் (2023-24)

தூய்மை இந்தியா (SBM 2.0) 2023-2024, திட்டத்தின் கீழ், தனிநபர் கழிப்பிடம், புதிதாக சமுதாய கழிப்பிடம், நவீன கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் எண். 5990/2022/தூஇதி 2 –நாள்.08.09.2023ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

| வ. எண் | திட்டப்பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| | பொதுக் கழிப்பிடங்கள் (2023-2024) | |
| 1 | வார்டு எண்.62க்குட்பட்ட பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் மு.கருணாநிதி பேருந்து முனையத்தில் புதிதாக சிறுநீர் கழிப்பிடம் கட்டும் (வடக்கு பகுதி) | **0.35** |
| 2 | வார்டு எண்.62க்குட்பட்ட பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் மு.கருணாநிதி பேருந்து முனையத்தில் புதிதாக சிறுநீர் கழிப்பிடம் கட்டும் (தெற்கு பகுதி) | **0.35** |
| 3 | வார்டு எண்.47க்குட்பட்ட சுந்தர்ராஜ் நகர் பகுதியில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டும் பணி ( 12 எண்ணிக்கை + 4 சிறுநீர் கழிப்பிடம்) | **0.30** |
| | மொத்தம் | **1.00** |

மேற்கண்ட பணிகளை SBM 2.O திட்டத்தின் கீழ், மேற்கொள்வதற்கு மாமன்றத் தீர்மானம் எண். 828 நாள்.30.11.2023ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.



## ஆ. சமுதாயக் கழிப்பிடம் மற்றும் பொதுக்கழிப்பிடம் (2023-24)

தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2023-2024, திட்டத்தின் கீழ், தனிநபர் கழிப்பிடம், புதிதாக சமுதாய கழிப்பிடம், நவீன கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணிக்கு தலைமை செயலாளர், தமிழ்நாடு அரசு அவர்களின் தலைமையில் நடைபெற்ற 6th State High Powered Committee Date. 08.02.2024 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் உத்திரவு ந.க.எண்.6450/2024.SBM -1(1), Date.07.03.2024 ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக நவீன கழிப்பிடங்களை கட்டும் பணிகளுக்கு பின்வருமாறு மதிப்பீடுகள் தயார் செய்யப் பட்டுள்ளது. Community Toilet – Rs.1.50 lakh/ seat, Public Toilet – Rs. 2.50 lakhs / Seat. Urinal – Rs.32000/ Seat

| வ. எண் | திட்டப்பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| | சமுதாயக் கழிப்பிடங்கள் (2023-2024) | |
| 1 | வார்டு எண்.16க்குட்பட்ட அம்மாகுளம் கலைவாணர் தெரு பகுதியில் புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி ( 10 எண்ணிக்கை +3 சிறுநீர் கழிப்பிடம் ) | **0.16** |
| 2 | வார்டு எண்.57க்குட்பட்ட அந்தோணியார் கோவில் தெரு பகுதியில் புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி ( 10 எண்ணிக்கை +3 சிறுநீர் கழிப்பிடம் ) | **0.16** |
| 3 | வார்டு எண்.18க்குட்பட்ட அலங்கநாதபுரம் பகுதியில் புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி ( 10 எண்ணிக்கை +3 சிறுநீர் கழிப்பிடம் ) | **0.19** |
| | கூடுதல் (1) | **0.51** |
| | பொதுக் கழிப்பிடங்கள் (2023-2024) | |
| 4 | வார்டு எண்.57க்குட்பட்ட ராஜீவ் காந்தி நகர் பகுதியில் புதிதாக நவீன பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி (12 எண்ணிக்கை + 4 சிறுநீர் கழிப்பிடம்) | **0.31** |
| 5 | வார்டு எண்.56க்குட்பட்ட தெற்கு தெரு கருமண்டபம் பகுதியில் புதிதாக நவீன பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி (12 எண்ணிக்கை + 4 சிறுநீர் கழிப்பிடம்) | **0.31** |
| 6 | வார்டு எண்.18க்குட்பட்ட காந்தி மார்கெட் தெற்கு பகுதியில் (Side Block) புதிதாக நவீன பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி (12 எண்ணிக்கை + 4 சிறுநீர் கழிப்பிடம்) | **0.31** |
| 7 | வார்டு எண்.18க்குட்பட்ட காந்தி மார்கெட் வடக்கு பகுதியில் (Side Block) புதிதாக நவீன பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி (12 எண்ணிக்கை + 4 சிறுநீர் கழிப்பிடம்) | **0.31** |
| | கூடுதல் (2) | **1.25** |
| | ஆக மொத்தம் (1+2) | **1.76** |

மேற்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ள திட்ட பணிகள் அனைத்தும் முடிக்கபெற்று, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வரப்படவுள்ளது.

### இ. SBM 2.0 திட்டம் திடக்கழிவு மேலாண்மை (2022-23)

SBM 2.0 திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கீழ்கண்டவாறு பணிகள் அரியமங்கலம் கலப்புர கிடங்கு பகுதியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணி | மதிப்பீடு (ரூ. கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | கட்டிடக் கழிவுகளை அகற்ற கட்டிட இடிபாடுகள் செயலாக்க மையம் அமைக்கும் பணி<br>C&D Collection, Transportation, Processing and Management of C&D Waste திட்டத்தினை DBFOT முறையில் மேற்கொள்ள, கட்டிட இடிபாடுகள் செயலாக்க மையம் (50 MT அளவில்) அமைக்கும் பணி | 3.00 | பணி நடைபெற்று வருகிறது. |

### ஈ. திடக்கழிவு மேலாண்மை (2023-24)

| | | | |
|---|---|---|---|
| 2. | 250TPD திறன்கொண்ட தானியங்கி வளமீட்பு மையம் (Automatic Material Recovery Facilities) தனியார் பங்களிப்பின் அடிப்படையில் வடிவமைத்தல், உருவாக்குதல், நிதி செய்தல், இயக்குதல் மற்றும் பரிமாற்றம் (DBFOT) அடிப்படையில் அமைக்கும் பணி (ஒப்பந்த காலம் - 21 ஆண்டுகள்) | **25.40** | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளது |
| 3. | 100 TPD திறன் கொண்ட செறிவூட்டப்பட்ட உயிரி எரிவாயு கலன்கள் (BIO-CNG) – 20 ஆண்டுகள் ஒப்பந்த காலத்தில் தனியார் பங்களிப்பின் அடிப்படையில் (Design Build Finance Operate & Transfer (DBFOT) model Under PPP mode) அமைக்கும் பணி | **30.78** | நிலம் கண்டறியப் பட்டுள்ளது |

### உ. திடக்கழிவு மேலாண்மை (2024-25)

| | | | |
|---|---|---|---|
| 4. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - அரியமங்கலம் கலப்புரக்கிடங்கில் தேக்கமடைந்துள்ள சுமார் 617716.00 மெ.டன் (772145 க.மீ) திடக்கழிவுகளை விஞ்ஞான முறையில் தீர்வு காணும் வகையில் Bio-Mining (Phase-III) திட்டத்தினை செயல்படுத்தும் பணி | **40.85** | பணி நடைபெற்று வருகிறது |

### ஊ. SBM 2.O சமுதாயக் கழிப்பிடம் மற்றும் பொதுக்கழிப்பிடம் (2025-26)

தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2025-2026, திட்டத்தின் கீழ், தனிநபர் கழிப்பிடம், புதிதாக சமுதாய கழிப்பிடம், நவீன கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணிக்கு தலைமை செயளாளர், தமிழ்நாடு அரசு அவர்களின் தலைமையில் நடைபெற்ற 10th State High Powered Committee Date. 15.10.2025 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் உத்திரவு ந.க.எண். DMA/288/2025.SBM-2, Date.24.11.2025 ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதன்அடிப்படையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக நவீன கழிப்பிடங்களை கட்டும் பணிகளுக்கு பின்வருமாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. Community Toilet – Rs.1.50 lakh/ seat, Public Toilet – Rs. 2.50 lakhs / Seat. Urinal – Rs.32000/ Seat

| வ. எண் | திட்டப்பணி விபரம் | மதிப்பீடு (ரூ கோடியில்) |
|---|---|---|
| | சமுதாயக் கழிப்பிடங்கள் (2025-2026) | |
| 1. | வார்டு எண்.25க்குட்பட்ட கொடாப்பு ரோடு நகர் நல மையம் அருகில் புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (ஆண்கள் -7 Seats, பெண்கள் - 7 Seats) | 0.21 |
| 2. | வார்டு எண்.46க்குட்பட்ட மத்திய சிறைச்சாலை பகுதியில் புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (ஆண்கள் - 6 Seats, பெண்கள் - 6 Seats) | 0.18 |
| 3. | வார்டு எண். 57க்குட்பட்ட கொல்லாங்குளம் பகுதியில் புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (ஆண்கள் - 6 Seats, பெண்கள் - 6 Seats) | 0.18 |
| 4. | வார்டு எண். 51க்குட்பட்ட பக்காளி தெரு பகுதியில் புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (ஆண்கள் -5 Seats, பெண்கள் - 5 Seats) | 0.15 |
| 5. | வார்டு எண். 27க்குட்பட்ட பென்சனர் தெரு பகுதியில் அமைந்துள்ள பழைய கழிப்பிடத்தை இடித்துவிட்டு, புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (ஆண்கள் -10 Seats, பெண்கள் - 10 Seats) | 0.30 |
| 6. | வார்டு எண். 32-க்குட்பட்ட மல்லிகைபுரம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள பழைய கழிப்பிடத்தை இடித்துவிட்டு, புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (ஆண்கள் -8 Seats, பெண்கள் - 08 Seats, Urinal -10 Seats) | 0.27 |
| 7. | வார்டு எண். 33-க்குட்பட்ட தாமோதரன் எடத்தெரு பகுதியில் அமைந்துள்ள பழைய கழிப்பிடத்தை இடித்துவிட்டு, புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (ஆண்கள் -8 Seats, பெண்கள் - 08 Seats, Urinal -10 Seats) | 0.27 |
| 8. | வார்டு எண். 38 க்குட்பட்ட குழந்தை ஏசு தெரு பகுதியில் அமைந்துள்ள பழைய கழிப்பிடத்தை இடித்துவிட்டு, புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (ஆண்கள் - 8 Seats, பெண்கள் - 8 Seats, ) | 0.24 |
| 9. | வார்டு எண். 38 க்குட்பட்ட VS காலனி பகுதியில் அமைந்துள்ள பழைய கழிப்பிடத்தை இடித்துவிட்டு, புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (ஆண்கள் - 8 Seats, பெண்கள் - 8 Seats, ) | 0.24 |
| | கூடுதல் (1) | **2.04** |

| | பொதுக் கழிப்பிடங்கள் (2025-2026) | |
|---|---|---|
| 1. | வார்டு எண். 63க்குட்பட்ட காவக்கார தெரு, சாத்தனூர் மெயின்ரோட்டில் அமைந்துள்ள பகுதியில் புதிதாக நவீன பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி (ஆண்கள் - 5 Seats, பெண்கள் - 5 Seats) | 0.25 |
| 2. | வார்டு எண். 62க்குட்பட்ட எடமலைப்பட்டி புதூர் கலைமகள் பள்ளி அருகில் புதிதாக நவீன பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி ( ஆண்கள் - 6 Seats, பெண்கள் - 6 Seats) | 0.30 |
| 3. | வார்டு எண். 19க்குட்பட்ட கள்ள தெரு, பெரியக்கடை வீதி பகுதியில் அமைந்துள்ள கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதிய நவீன பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி (ஆண்கள் -3 Seats, பெண்கள் - 3 Seats) | 0.15 |
| | கூடுதல் (2) | 0.70 |
| | ஆக மொத்தம் (1+2) | 2.74 |

மேற்கண்ட பணிகளை SBM 2.O 2025-26 திட்டத்தின் கீழ், மேற்கொள்வதற்கு மாமன்றத்தால் 28.12.2025 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டு, மேற்படி திட்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

## 25. 15வது நிதிக்குழு சுற்றுப்புற காற்றின் தரம் மேம்படுத்துதல் நிதி 2024-2025 – (15th CFC Ambient Air Quality fund)

இத்திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பஞ்சப்பூர் கனரக சரக்கு வாகன முனையத்தில் கூடுதல் பணிகளை ரூ.9.50 கோடி மதிப்பீட்டில் (15வது நிதிக்குழு (காற்றின் தரம் மேம்படுத்துதல் நிதி ரூ.6.88 கோடி மற்றும் மாநகராட்சி நிதி ரூ.2.62 கோடி) மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.27638/2024/EA2 நாள். 23.01.2025ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரர் மூலம் அனைத்துப் பணிகளும் ரூ.7.72 கோடி செலவில் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## 26. 15வது நிதிக்குழு சேமிப்பு நிதி 2024-2025 (15th FC Savings fund)

இத்திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பஞ்சப்பூர் கனரக சரக்கு வாகன முனையத்தில் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் இதரப்பணிகளை ரூ. 8.47 கோடி மதிப்பீட்டில் (15வது நிதிக்குழு சேமிப்பு நிதி ரூ.0.94 கோடி மற்றும் மாநகராட்சி நிதி ரூ. 7.53 கோடி) மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.27637/2024/EA2 நாள். 23.01.2025ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரர் மூலம் அனைத்துப் பணிகளும் ரூ.7.00 கோடி செலவில் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## 27. Super sucker cum jetting with Recycling facility Vehicle - 1 No

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதி 2024-25ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை தலைப்பு நிதியின் கீழ், புதைவடிகால் அதிக ஆழமுள்ள ஆள் இறங்கு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை உடனடியாக நீக்குவதற்கு அதி நவீன வகை Super sucker cum jetting with Recycling facility 13000 Litre Tank Capacity Vehicle -1 எண்ணிக்கை ரூ.3.78 கோடி மதிப்பீட்டில் புதிதாக வாங்கப்பட்டு 27-12-2025 முதல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

இவ்வாகனம் அதிக உறிஞ்சும் திறன் மற்றும் அடைப்பு நீக்கும் திறன் கொண்ட அதி நவீன வகை கனரக வாகனமாகும். இவ்வாகனம் மூலம் மாநகர பகுதிகளில் உள்ள புதைவடிகால் ஆள்நுழைவு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை மிகவும் எளிதாகவும் உடனுக்குடனும் நீக்க இயலும். மேலும் உச்ச நீதிமன்றத்தின் உத்திரவின்படி இப்பணியில் ஆள்நுழைவு குழிகளில் மனித ஆற்றளை ஈடுபடுத்துவது முற்றிலும் தவிர்க்கப்பட்டும், தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் பணிநேரம் குறைக்கப்பட்டும், கழிவுகளை பாதுகாப்பாக அகற்றியும், பகுதிவாழ் பொதுமக்களுக்கு பாதுகாப்பான சுற்றுச்சூழலும் ஏற்படுத்தலாம்.

மேற்கண்ட வாகனத்தின் வரவு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கழிவுநீர் மேலாண்மை பணியில் ஒரு மைல் கல் ஆகும்.





## 28. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி TURIP- 2024-25

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டதினால் சேதமடைந்த தார்ச்சாலைகளை, சீரமைக்க ரூ.33.73 கோடி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மொத்தம் 572 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, தற்போது, அனைத்து பணிகளும் முடிவுற்று, ரூ.31.97 கோடி செலவு செய்யப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.



**29. <u>தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி TURIP-2024-25 (சேமிப்பு-Phase I)</u>**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டதினால் சேதமடைந்த தார்ச்சாலைகளை, சீரமைக்க ரூ.9.98 கோடி மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மொத்தம் 88 பணிகளில் தற்போது, அனைத்து பணிகளும் முடிவுற்று, ரூ.8.66 கோடி செலவு செய்யப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**30. <u>தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி TURIP-2024-25 (சேமிப்பு – Phase II)</u>**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டதினால் சேதமடைந்த தார்ச்சாலைகளை, சீரமைக்க ரூ. 8.08 கோடி மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மொத்தம் 77 பணிகளில் தற்போது, அனைத்து பணிகளும் முடிவுற்று, ரூ. 6.91 கோடி செலவு செய்யப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**31. <u>நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் NSMT-2024-25</u>**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டதினால் சேதமடைந்த சிமெண்ட் தளங்களை, சீரமைக்க ரூ.17.90 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மொத்தம் 520 பணிகளில் தற்போது, அனைத்து பணிகளும் முடிவுற்று, ரூ.17.63 கோடி செலவு செய்யப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**32. <u>மாநில நிதிக்குழு மான்யம் (SFC-URDF)-2024-25</u>**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மண்சாலைகளை, தார்ச்சாலைகளாக மாற்றுவதற்கு ரூ.23.67 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மொத்தம் 346 பணிகளில் தற்போது, அனைத்து பணிகளும் முடிவுற்று, ரூ.23.19 கோடி செலவு செய்யப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## 33. தேசியநகர்புற சுகாதாரத் திட்டம் 2024-25 (NUHM) 15வது நிதிக்குழு நல நிதி

இத்திட்டத்தின் கீழ், தலா ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் 2 எண்ணிக்கையில் புதிய நகர்புற ஆரம்ப சுகாதார மையங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைபெறவுள்ளது மற்றும் தலா ரூ.0.60 கோடி மதிப்பீட்டில், 2 எண்ணிக்கையில் கூடுதல் நகர்புற ஆரம்ப சுகாதார மையங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தற்போது இப்பணிகள் நடைபெற்ற வருகிறது.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டு (ரூ கோடியில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.13க்குட்பட்ட தெப்பக்குளம் நந்தி கோவில் தெரு பகுதியில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி. | 0.60 |
| 2. | வார்டு எண். 3 9 க்குட்பட்ட பாப்பாக்குறிச்சி மெயின் ரோடு ( வடக்கு காட்டூர்) பகுதியில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி | 0.60 |
| 3. | வார்டு எண்.47க்குட்பட்ட ஏரிக்கரை மெயின் ரோடு, சுப்பிரமணியபுரம் பகுதியில் புதியநகர்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டிடம் கட்டும் பணி. | 1.50 |
| 4. | வார்டு எண்.18க்குட்பட்ட பீரங்கிகுளம் பகுதியில் புதிய நகர்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டிடம் கட்டும் பணி. | 1.50 |

## 34. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி TURIP- 2025-26

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டதினால் சேதமடைந்த தார்ச்சாலைகளை, சீரமைக்க ரூ.19.26 கோடி மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மொத்தம் 281 பணிகளில் தற்போது, 245 பணிகள் முடிவுற்று, ரூ.8.16 கோடி செலவு செய்யப்பட்டு, மீதமுள்ள 36 பணிகள் நடைபெற்று வருகிறது.

## 35. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி TURIP- 2025-26 (கூடுதல்)

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டதினால் சேதமடைந்த தார்ச்சாலைகளை, சீரமைக்க ரூ.9.82 கோடி மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மொத்தம் 50 பணிகளில் தற்போது, 245 பணிகள் முடிவுற்று, ரூ.2.42 கோடி செலவு செய்யப்பட்டு, மீதமுள்ள 5 பணிகள் நடைபெற்று வருகிறது.

## 36. சிறப்பு நிதி Special Fund - 2025-26

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டதினால் சேதமடைந்த சிமெண்ட் தளங்களை, சீரமைக்க ரூ.15.45 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மொத்தம் 230 பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதில், தற்போது, 217 பணிகள் முடிவுற்று, ரூ.8.65 கோடி செலவு செய்யப்பட்டு, மீதமுள்ள 13 பணிகள் நடைபெற்று வருகிறது.

**37. மாநில நிதிக்குழு மான்யம் (SFC-URDF)- 2025-26**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மண்சாலைகளை, தார்ச்சாலைகளாக மாற்றுவதற்கு ரூ.22.54 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மொத்தம் 233 பணிகளில் தற்போது, 209 பணிகள் முடிவுற்று, ரூ.15.05 கோடி செலவு செய்யப்பட்டு, மீதமுள்ள 24 பணிகள் நடைபெற்று வருகிறது.

**38. 15வது நிதிக்குழு மான்யம் (15th CFC )- 2025-26**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைக்கும் பணிகளை ரூ.5.81 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மொத்தம் 45 பணிகளில் தற்போது, அனைத்து பணிகளும் முடிவுற்று, ரூ.2.56 கோடி செலவு செய்யப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**39. 15வது நிதிக்குழு மான்யம் (15th CFC Savings )- 2025-26**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டதினால் சேதமடைந்த சிமெண்ட் தளங்களை, சீரமைக்க ரூ. 4.855 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மொத்தம் 48 பணிகளில் தற்போது, 42 பணிகள் முடிவுற்று, ரூ, 2.99 கோடி செலவு செய்யப்பட்டு, மீதமுள்ள 6 பணிகள் நடைபெற்று வருகிறது.

**40. மூலதன நிதி (Capital Grant Fund 2025 -26 )**

அ) இத்திட்டத்தின் கீழ், ரூ. 1.58 கோடி மதிப்பீட்டில் வார்டு எண்.22க்குட்பட்ட தில்லை நகர், இரட்டை வாய்க்கால் ஒட்டியுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் அழகுபடுத்தும் பணி. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம், நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தற்பொழுது பணிகள் முடிவுற்று, 08-01-2026 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.



ஆ) மூலதன மான்ய நிதியின் கீழ், ரூ.3.67 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, கீழ்க்கண்ட பகுதிகளில் காந்தி மார்க்கெட்டினை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண். | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூ. கோடியில்) | பணி முன்னேற்ற சதவீதம் |
|---|---|---|---|
| 1. | வார்டுக்குழு அலுவலகம் -2க்குட்பட்ட காந்தி மார்க்கெட் பகுதியினை மேம்படுத்தும் பணி | 3.67 | 40% |
| | மொத்தம் | 3.67 | |



இ) வெள்ளத்தடுப்புச் சுவர் கட்டும் பணி

இத்திட்டத்தின் கீழ், கீழ்கண்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்வதற்கு 19-01-2026 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | பணிகளின் பெயர் | மான்யம் | மாநகராட்சி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.13க்குட்பட்ட பட்டர்வொர்த் வாய்க்கால் மற்றும் வார்டு எண். 12க்குட்பட்ட கோட்டை வாய்க்காலில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணி (கட்டம் 1) | 0.498 | 0.332 | 0.83 |
| 2. | வார்டு எண்.15க்குட்பட்ட எஸ்.எஸ்.நகர் வாய்க்கால் மற்றும் மதுரத் தோட்டம் வாய்க்காலில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணி (கட்டம் 1) | 1.572 | 1.048 | 2.62 |
| 3. | வார்டு எண்.15க்குட்பட்ட இரட்டை வாய்க்காலில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணி (கட்டம் 1) | 1.334 | 0.896 | 2.23 |
| | மொத்தம் | **3.404** | **2.276** | **5.68** |

## 41. இயக்குதல் மற்றும் பராமரித்தல் – பற்றாக்குறை மான்ய நிதி (Operation & Maintenance - Deficit Grant Fund 2025 -26 )

ரூ.10.76 கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பகுதிகளில் 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டு (ரூ கோடியில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.64க்குட்பட்ட பாரி நகர் பகுதியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணி | 1.91 |
| 2. | வார்டு எண்.65க்குட்பட்ட பசுமை நகர் பகுதியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணி | 1.75 |
| 3. | வார்டு எண்.57க்குட்பட்ட ஸ்டேட் பாங்க் காலனி பகுதியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணி | 1.93 |
| 4. | வார்டு எண்.58க்குட்பட்ட ராஜராஜன் நகர் பகுதியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணி | 1.80 |
| 5. | வார்டு எண்.60க்குட்பட்ட காஜாமலை காலனி பகுதியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணி | 1.68 |
| 6. | வார்டு எண்.60க்குட்பட்ட காஜாமலை காலனி (ஹவுசிங் யூனிட்) பகுதியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணி | 1.69 |
| | மொத்தம் | **10.76** |

## 42. கழிவுநீர் உந்து குழாய்களை மாற்றியமைக்கும் பணி

பஞ்சப்பூரில் புதிதாக டைடல் பூங்கா அமையவுள்ள, நிலத்திற்கு கீழே உள்ள இடத்தில் குறுக்கே செல்லும், அண்ணா ஸ்டேடியம் கழிவுநீர் உந்து குழாயினையும் மற்றும் ஒத்தகடை கழிவுநீர் உந்து குழாயினையும் மாற்றி அமைப்பதற்கு டைடல் பார்க் நிறுவனத்திற்கு ரூ.12.80 கோடி செலுத்த கோரியதன் பேரில், மேற்படி நிறுவனம் 04.12.2024ம் தேதி ரூ.12.80 கோடியை இம்மாநகராட்சிக்கு செலுத்தியுள்ளது.

இதனை தொடர்ந்து, மேற்படி கழிவுநீர் உந்து குழாய்களை மாற்றியமைப்பதற்கு கீழ்க்கண்டவாறு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டு (ரூ கோடியில்) |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு எண். 62க்குட்பட்ட பஞ்சப்பூரில் புதிதாக அமையவுள்ள டைடல் பார்க் இடத்தில் குறுக்கே செல்லும், அண்ணா ஸ்டேடியம் கழிவுநீர் உந்து குழாயினை மாற்றியமைக்கும் பணி | 6.00 |
| 2. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு எண். 62க்குட்பட்ட பஞ்சப்பூரில் புதிதாக அமையவுள்ள டைடல் பார்க் இடத்தில் குறுக்கே செல்லும் ஒத்தக்கடை கழிவுநீர் உந்து குழாயினை மாற்றியமைக்கும் பணி | 6.00 |

மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. CMK Projects Private Ltd என்ற ஒப்பந்தக்கார நிறுவனத்திற்கு பணி உத்தரவுகள் வழங்கப்பட்டு, பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. இது வரை 80 சதவீதம் பணிகள் நிறைவேற்றப்பட்டு, இப்பணிகளுக்கென ரூ. 1.72 கோடி செலவிடப் பட்டுள்ளது. ஏப்ரல் 2026 மாத இறுதிக்குள் பணிகள் முழுமையாக நிறைவுடையும்.

## 43. பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த காய்கறி சந்தை கட்டும் பணி

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த காய்கறி சந்தை அமைக்கும் பணியினை மேற்கொள்ள, விரிவான திட்ட அறிக்கை ரூ.236.00 கோடி மதிப்பீட்டில் தயார் செய்து அரசிடம் உரிய நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதை தொடர்ந்து, கீழ்க்கண்ட நிதியாதாரங்களின்படி பணியினை மேற்கொள்வதற்கு அரசாணை எண்.267 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.06-05-2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ. எண் | நிதியாதாரம் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் திட்டம் | 2.120.00 |
| 2. | மூலதன மான்ய நிதி | 8.00 |
| 3. | முனிசிபல் பத்திரங்கள் (Municipal Bond) | 100.00 |
| 4. | மாநகராட்சி பங்களிப்பு | 8.00 |
| | மொத்தம் | **236.00** |

இதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்கார கூட்டு நிறுவனத்திற்கு 28-07-2025 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிக்காக முனிசிபல் பத்திரம் மூலம் ரூ.100.00 கோடி 06-02-2026 அன்று திரட்டப்பட்டுள்ளது





தற்பொழுது 25 சதவீதப் பணிகள் நிறைவுற்றுள்ளது. இது வரை ரூ.25.53 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## திருச்சிராப்பள்ளி சீர்மிகு நகரத் திட்டம் – (Smart City Mission)

திருச்சிராப்பள்ளி நகரினை சீர்மிகு நகரமாக மாற்றுவது குறித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து, மத்திய அரசுக்கு 31.03.2017 அன்று சமர்ப்பிக்கப்பட்டு, மத்திய அரசு அலுவலக ஆணை எண்.K-15016/157/2015– SC-1, நாள்.28.06.2017-ன்படி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி "சீர்மிகு நகரத் திட்டத்தினை" (Smart City Mission) செயல்படுத்த உகந்த நகரமாக தேர்வு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, இத்திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு "தனி நோக்கு அமைப்பு" (Special Purpose Vehicle) அமைக்க அரசாணை எண்.109 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.10.2017ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனிநோக்கு அமைப்பிற்கான நிறுவனம் அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு 22.12.2017 அன்று இந்திய நிறுவனங்களின் சட்டம் 2013ன் கீழ் திருச்சிராப்பள்ளி சீர்மிகு நகர நிறுவனம் என்ற பெயருடன் கூடிய நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 83 பணிகள் ரூ.965.17 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டதில், 79 பணிகள் முடிவுற்று மீதமுள்ள 4 பணிகள் நடைபெற்று வருகிறது.

1. பெரியார் நகர் நீர்சேகரிப்பு கிணறு - கம்பரசம்பேட்டையிலிருந்து, அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் (ABD Area) உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு புதிதாக 17.50 கி.மீட்டர் நீளத்திற்கு குடிநீர் உந்துக் குழாய் பதித்தல் (தொகுப்பு எண்.3)

அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் (ABD Area) 17.459 கி.மீ குடிநீர் உந்துக் குழாய் பதித்தல் பணிகள் ரூ.21.58 கோடி மதிப்பீட்டில், எடுத்து கொள்ளப்பட்டு, 15.019 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகளும் முடிவுற்று 07.01.2026 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 20.88 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் விரைவில் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

2. வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய்கள் புனரமைக்கும் பணி–பகுதி-1, 2 & 2 ஏ- தொகுப்பு- 1 ஏ

வரையறுக்கப்பட்ட பகுதி – 1, 2, 2 ஏ-ல் ரூ.70.76 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை குழாய் புனரமைக்கும் பணிகள் எடுத்து கொள்ளப்பட்டு, கழிவுநீர் குழாய் –55.558 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது, வீட்டிணைப்புகள் – 9851 வழங்கப்பட்டுள்ளன, ஆள்நுழைவு தொட்டிகள் – 2571 முடிக்கப்பட்டுள்ளன. சாலையோர உந்து நிலையம் - 4 எண்கள் கட்டுமான பணிகள் முடிவடைந்துள்ளன, பிரதான கழிவுநீர் உந்து குழாய் –1.072 கி. மீட்டர் பதிக்கப்பட்டுள்ளது. 99.00 சதவீத பணிகள் முடிவுற்ற நிலையில் மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.62.20 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் விரைவில் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

3. <u>வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய்கள் புனரமைக்கும் பணி - பகுதி-3 & 4- தொகுப்பு-1பி</u>

வரையறுக்கப்பட்ட பகுதி – 3, 4-ல் ரூ.62.03 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை குழாய் புனரமைக்கும் பணிகள் எடுத்து கொள்ளப்பட்டு, கழிவுநீர் குழாய் – 61.833 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது, வீட்டிணைப்புகள் – 9574 வழங்கப்பட்டுள்ளன. ஆள்நுழைவு தொட்டிகள் – 2614 எண்கள் முடிக்கப்பட்டுள்ளன, சாலையோர உந்து நிலையம் – 4 கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன. பிரதான கழிவுநீர் உந்து குழாய் – 1.441 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது. 99.00 சதவீத பணிகள் முடிவுற்ற நிலையில் மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.55.14 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் விரைவில் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

4. <u>வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய்கள் புனரமைக்கும் பணி - பகுதி-5 & 6 - தொகுப்பு-1சி</u>

வரையறுக்கப்பட்ட பகுதி – 5, 6-ல் ரூ.77.51 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை குழாய் புனரமைக்கும் பணிகள் எடுத்து கொள்ளப்பட்டு, கழிவுநீர் குழாய் – 58.345 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது, வீட்டிணைப்புகள் – 7750 வழங்கப்பட்டுள்ளன, ஆள்நுழைவு தொட்டிகள் – 2421 முடிக்கப்பட்டுள்ளன. சாலையோர உந்து நிலையம் - 7 எண் கட்டுமான பணிகள் முடிவடைந்துள்ளன, பிரதான கழிவுநீர் உந்து குழாய் – 0.685 கி. மீட்டர் பதிக்கப்பட்டுள்ளது. 99 சதவீத பணிகள் முடிவுற்ற நிலையில் மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.59.26 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி மார்ச் -2026க்குள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.

## <u>சூரியமின் ஒளிநிலையங்கள்</u>

மேலும், சீர்மிகு நகர திட்டத்தின் கீழ், பஞ்சப்பூர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ரூ.50.00 கோடி மதிப்பீட்டில், கட்டம் 1 மற்றும் கட்டம் 2ன் கீழ் 9.60 மெகாவாட் திறன் கொண்டசூரிய ஒளி மின் நிலையங்கள் (2.40 MWp X 4 எண்கள்) அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. மேற்படி சூரிய ஒளி மின்நிலையத்திலிருந்து, ஜனவரி 2025 முதல் அக்டோபர் 2025 வரை 1.24 கோடி மின்சார யூனிட்கள் உற்பத்தி செய்யப்பட்டு,அதன் மூலம் ரூ.5.78 கோடி மின்கட்டணத்தில் சேமிப்பு செய்யப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட 5 கோட்டப் பகுதிகளில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 206 அலுவலக கட்டிடங்களில், சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், பல்வேறு வகையான மொத்தம் 831 KWp திறன் கொண்ட சூரிய ஒளி மேற்கூரை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி சூரிய ஒளி மேற்கூரை மூலமாக கீழ்க்கண்டவாறு மின் உற்பத்தி செய்யப்பட்டு, மின்னாற்றல் சேமிப்பு செய்யப்பட்டு வருகிறது.

| வ. எண் | ஆண்டு | மின் உற்பத்தி செய்யப்பட்ட விவரம் (யூனிட்கள்) | மின் கட்டண சேமிப்பு விவரம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | 2021-22 | 651669 | 2804608.00 |
| 2. | 2022-23 | 785537 | 4940524.00 |
| 3. | 2023-24 | 779251 | 4470938.00 |
| 4. | 2024-25 | 673753 | 3909675.00 |
| | | 2890210 | 16125745.00 |



## 2025-2026 ஆம் ஆண்டில் மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

1. சாலைப்பணிகள்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அனைத்து வார்டு குழு அலுவலகங்களுக்குட்பட்ட பகுதிகளிலும் மொத்தம் 123.36 கி.மீ நீளத்திற்கு தார்ச்சாலைகள் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகள் ரூ.80.60 கோடி செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

2. படிப்பகம் கட்டும் பணி

வார்டு குழு அலுவலகம் எண்.2, வார்டு எண்.30க்குட்பட்ட வரகனேரி பகுதியில் ரூ.0.27 கோடி செலவில் பிரான்சிஸ் படிப்பகம் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களால் 14-07-2025 அன்று திறந்து வைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.



வார்டு குழு அலுவலகம் எண். 4, வார்டு எண். 47, சுந்தர்ராஜ் நகர் பகுதியில் ரூ.0.12 கோடி செலவில் நூலகம் கட்டப்பட்டது.

3. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் - 3, வார்டு எண். 35க்குட்பட்ட செந்தண்ணீர்புரத்தில் புதிதாக 5.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணியினை ரூ. 1.94 கோடி மதிப்பீட்டில், பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 32533/2025/மா.ந.அ.3 நாள்.08.11.2025ல், திட்ட அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. இப்பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் துவங்கப்படும்.

## 4. தெருநாய்களுக்கான சிகிச்சை மையம் கட்டும் பணி (பொதுநிதி 2025-26)

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் நோய் வாய்ப்பட்டு சுற்றித் திரியும் தெருநாய்களிடமிருந்து நோய் தொற்று பரவுவதை தடுக்கும் வகையில், சிகிச்சை மையங்கள் கட்டும் பணியினை மேற்கொள்ள கீழ்க்கண்ட இடங்களில் தெருநாய்களுக்கான சிகிச்சை மையங்களை பொதுநிதி 2025-26ன் கீழ் கட்டுவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு (ரூ கோடியில்) |
|---|---|---|
| 1. | மண்டலம் 1, வார்டு எண். 4 பஞ்சக்கரை, அம்பேத்கார் நகர் பகுதியில் நோய்வாய்ப்பட்ட தெரு நாய்களுக்கான சிகிச்சை மையம் கட்டும் பணி - இ7/15100 /2025 (மையம்) | 0.30 |
| 2. | மண்டலம் 3, வார்டு எண். 46 கொட்டப்பட்டு ஜே. ஜே. நகர் பகுதியில் நோய்வாய்ப்பட்ட தெரு நாய்களுக்கான சிகிச்சை மையம் கட்டும் பணி - இ7/15383 /2025 (மையம்) | 0.30 |
| 3. | மண்டலம் 5, வார்டு எண்.11 கோணக்கரை பகுதியில் நோய்வாய்ப்பட்ட தெரு நாய்களுக்கான சிகிச்சை மையம் கட்டும் பணி - இ7/15101 /2025 (மையம்) | 0.30 |
| 4. | மண்டலம் 3, வார்டு எண். 36 க்குட்பட்ட அரியமங்கலம் குப்பை கிடங்கு வளாகத்தில் தெருநாய்கள் பராமரிப்பதற்காக புதிதாக தெருநாய் காப்பகங்கள் கட்டும் பணி | 0.30 |

நடப்பாண்டில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 5. பல்நோக்கு பொதுமக்கள் சேவை மையக் கட்டிடங்கள் கட்டும் பணி

65 வார்டு அலுவலகங்களிலும் வார்டு ஒன்றிற்கு ஒன்று வீதம் ரூ.0.25 கோடி மதிப்பீட்டில் மாமன்ற உறுப்பினர் மற்றும் பல்நோக்கு பொதுமக்கள் சேவை மையம் கட்டும் பணிகள், சுமார் 60 வார்டுகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 வார்டுகளில் தற்பொழுது பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

கணிணி மூலம் வரிவசூல் செய்யும் மையங்கள் இக்கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ளதன் மூலம், பொதுமக்கள் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் வரியில்லா இனங்களை எளிதாக செலுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசின் மின்னணு சேவை மையங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள் இம்மையங்களிலும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.




## 6. வார்டு எண்.5 வார்டு குழு கூட்ட அறை கட்டும் பணி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு எண்.5, வார்டு எண்.26ல் அமைந்துள்ள வார்டு குழு எண்.5ற்கான வார்டு குழு கூட்ட அறை சுமார் ரூ.0.50. கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு 05-09-2025 அன்று முதல் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.



7. நவீன சிறுநீர் கழிப்பிடம் கட்டுதல் மற்றும் பொது கழிப்பிடம் கட்டுதல்

வார்டு குழு அலுவலகம் எண். 4 , வார்டு எண். 5 6 , சமத்துவநகர் பகுதியில் உள்ள சமுதாயக் கழிப்பிடத்தில் ரூ. 0.11 கோடி செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண்.11, கீரைக் கொல்லைத் தெருவில் ரூ.0.22 கோடி செலவில் கழிப்பிடம் திரும்பக் கட்டப்பட்டது

8. நகர்புற ஆரம்ப சுகாதார நிலையப் பணிகள்

வார்டு குழு அலுவலகம் எண். 2 , வார்டு எண். 1 6 க்குட்பட்ட வசந்த நகர் நகர்ப்புற சுகாதார நிலையத்தில் ரூ.0.04 கோடி செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப் பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.3, வார்டு எண்.39க்குட்பட்ட பாப்பாகுறிச்சி நகர்ப்புற சுகாதார நிலையத்தில் ரூ.0.06 கோடி செலவில் குடிநீர் வசதி வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண். 3 , வார்டு எண். 4 2 க்குட்பட்ட அம்மன்நகர் நகர்ப்புற சுகாதார நிலையத்தில் ரூ.0.06 கோடி செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.1, வார்டு எண்.5க்குட்பட்ட திருவானைக்கோவில் தெப்பக்குள நகர்ப்புற சுகாதார நிலையத்தில் ரூ. 0.16 கோடி செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.2, வார்டு எண். 1 8 க்குட்பட்ட கீழரண் சாலையில் உள்ள நகர்ப்புற சுகாதார நிலையத்தில் ரூ.0.07 கோடி செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது

வார்டு குழு அலுவலகம் எண். 2 , வார்டு எண். 3 2 க்குட்பட்ட இருதயபுரத்தில் உள்ள நகர்ப்புற சுகாதார நிலையத்தில் ரூ.0.18 கோடி செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது

9. வெள்ள தடுப்புச் சுவர் கட்டும் பணிகள்

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண்.08, வெக்காளியம்மன் நகரில் ரூ.0.43 கோடி செலவில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.3, வார்டு எண்.37, குவளக்குடி கால்வாயில் ரூ.0.43 கோடி செலவில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.1, வார்டு எண்.12, கோட்டை வாய்க்காலில் ரூ.0.10 கோடி செலவில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.54, பெரியமிளகுபாறைப் பகுதியில் ரூ.0.50 கோடி செலவில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டது.

10. நுண் உரக் கிடங்கு அபிவிருத்திப் பணிகள்

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண்.26, கல்லாங்காடு நுண்உரக்கிடங்கில் ரூ.0.40 கோடி செலவில் சுற்றுப்புறச் சுவர் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது.

11. மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகள் மற்றும் மராமத்துப் பணிகள்

மாநகராட்சிப் பகுதிகளில் செல்லும் வாய்க்கால்கள் மற்றும் மழைநீர் வடிகால்களில் உள்ள மண் துகள்கள் மற்றும் குப்பைகள் அகற்றும் பணிகள் மற்றும் மராமத்துப் பணிகள் மொத்தம் ரூ.7.59 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 12. மழைநீர் வடிகால்கள் அமைத்தல் மற்றும் மராமத்துப் பணிகள்

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 67.89 கி.மீ நீளத்திற்கு புதிதாக மழைநீர் வடிகால்கள் ரூ.35.55 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.



## 13. மயான மேம்பாட்டு பணிகள்

வார்டு குழு அலுவலகம் எண்.1, வார்டு எண்.6, மல்லிகைபுரம் மயானத்தில் ரூ.0.31 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வார்டு குழு அலுவலகம் எண்.1, வார்டு எண்.15, ஓயாமாரி மயானத்தில் ரூ.0.20 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 14. பூங்கா பணிகள்

வார்டு குழு அலுவலகம் எண். 4 , வார்டு எண். 5 1 ற்குட்பட்ட வள்ளியம்மை நகர் பூங்காவில் உடற்பயிற்சிகூடம், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் வேலி அமைக்கும் பணி ரூ.0.20 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.1, வார்டு எண். 12ற்குட்பட்ட கரூர் புறவழிச்சாலை கிழக்குப் புறத்தில் குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் ரூ. 0.18 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண். 4 , வார்டு எண்.47ற்குட்பட்ட சுந்தர்ராஜ் நகர் பூங்காவில் ரூ. 0.20 கோடி செலவில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.62ற்குட்பட்ட கிருஷ்ணாபுரம் பூங்காவில் ரூ. 0.21 கோடி செலவில் சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

வார்டு குழு அலுவலகம் எண்.3, வார்டு எண்.39ற்குட்பட்ட வின்நகர் விஸ்தரிப்பு பகுதியில் உள்ள பூங்காவில் ரூ. 0.03 கோடி செலவில் முள்வேலி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

வார்டு குழு அலுவலகம் எண். 4 , மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அமைந்துள்ள பெரும்பிடுகு முத்தரையர் மற்றும் எம்.கே.தியாகராஜபாகவதர் நினைவு மணிமண்டபத்தில் ரூ. 0.15 கோடி செலவில் பசுமை தளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண். 5 , வார்டு எண். 2 8 க்குட்பட்ட குழுமிக்கரைச் சாலையில் மொழிப்போர் தியாகி நினைவு மணிமண்டபம் ரூ. 0.12 கோடி செலவில் கட்டப்பட்டது.

**15. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள் கட்டும் பணி**

வார்டு குழு அலுவலகம் எண்.3, வார்டு எண்.41ற்குட்பட்ட மலைக்கோவில் மாரியம்மன் கோவில் தெருவில் ரூ. 0.10 கோடி செலவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் கட்டப்பட்டு,பயன்பாட்டில் உள்ளது.

**16. மாநகராட்சி பிற கட்டிடங்கள் பணி**

வார்டு குழு அலுவலகம் எண். 2 , வார்டு எண். 1 8 , விறகுப்பேட்டை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் ரூ.0.35 கோடி செலவில் சாலைகளில் திரியும் கால்நடைகளை பிடித்து அடைத்து பராமரிக்கும் மையம் கட்டப்பட்டுள்ளது. வார்டு குழு அலுவலகம் எண்.1, வார்டு எண்.3, வார்டு குழு அலுவலக கட்டிடத்தில் ரூ.0.36 கோடி செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.53க்குட்பட்ட மைய அலுவலக வளாகத்தில் ரூ.0.12 கோடி செலவில் கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வார்டு குழு அலுவலகம் எண்.2, வார்டு எண்.49க்குட்பட்ட ஜி கார்னர் இறைச்சிக்கூடத்தில் ரூ.0.20 கோடி செலவில் கூடுதலாக ஒரு கொட்டகை கட்டப்பட்டது.

வார்டு குழு அலுவலகம் எண்.2, வார்டு எண்.18க்குட்பட்ட கீழரண் சாலையில் உள்ள அம்மா உணவகத்தில் ரூ. 0.25 கோடி செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

**17. குழாய் செல்லும் பாலம் கட்டும் பணி**

வார்டு குழு அலுவலகம் எண்.1, வார்டு எண்.12க்குட்பட்ட தாஜ் கல்யாண மண்டபம் எதிரே குடிநீர் குழாய் செல்லும் பாலம் ரூ.0.21 கோடி செலவில் கட்டப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண்.10க்குட்பட்ட குடமுருட்டி ஆற்றுப் பாலத்தில் மராமத்துப் பணிகள் ரூ.0.06 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது.

**18. சாலை மைய தடுப்புச் சுவர் கட்டும் பணி**

வார்டு அலுவலகம் எண்.2, வார்டு எண்.18ற்குட்பட்ட கீழரண் சாலையில் சாலை மைய தடுப்புச்சுவர் ரூ.0.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது. வார்டு அலுவலகம் எண்.4, வார்டு எண்.65ற்குட்பட்ட புதுக்கோட்டை சாலையில் சாலை மைய தடுப்புச்சுவர் ரூ.0.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது.

## 19. நீராதாரங்கள் அபிவிருத்திப் பணி

வார்டு அலுவலகம் எண்.4, வார்டு எண்.62ற்குட்பட்ட குட்டக்கரை குளத்தினை சுற்றிலும், ரூ.0.83 கோடி செலவில் மின் விளக்குகள் மற்றும் அறிவிப்பு பலகை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

## 20. தெருவிளக்குகள் அமைக்கும் பணி

வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.47, விமான நிலைய சாலையில் 8 மீட்டர் உயரமுள்ள ஹைமாஸ்ட் தெருவிளக்குகள் ரூ.0.16 கோடி செலவில் அமைக்கப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.62 மற்றும் 63க்குட்பட்ட செட்டியப்பட்டி பாலம் மற்றும் படுகை சாலை சந்திப்பில் ரூ.0.06 கோடி செலவில் அமைக்கப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.62 எடமலைப்பட்டிப்புதூர் காவல் நிலைய சோதனைச் சாவடி நிலையத்திலிருந்து சென்னை-மதுரை புறவழிச்சாலை வரை 8 மீட்டர் உயரமுள்ள ஹைமாஸ்ட் தெருவிளக்குகள் ரூ.0.23 கோடி செலவில் அமைக்கப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.64, ராஜாராம் சாலையில் முருகவேல் நகர் முதல் எல்.ஐ.சி காலனி வரை 8 மீட்டர் உயரமுள்ள ஹைமாஸ்ட் தெருவிளக்குகள் ரூ. 0.31 கோடி செலவில் அமைக்கப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.64, ராஜாராம் சாலையில் கே. கே. நகர் பேருந்து நிலையத்திலிருந்து முருகவேல் நகர் வரை 8 மீட்டர் உயரமுள்ள ஹைமாஸ்ட் தெருவிளக்குகள் ரூ.0.41 கோடி செலவில் அமைக்கப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.65, புதுக்கோட்டை சாலை சந்திப்பு முதல் காவேரி நகர் வரை 8 மீட்டர் உயரமுள்ள ஹைமாஸ்ட் தெருவிளக்குகள் ரூ.0.48 கோடி செலவில் அமைக்கப்பட்டது மற்றும் காவேரி நகரிலிருந்து உடையான்பட்டி சாலை சந்திப்பு வரை 8 மீட்டர் உயரமுள்ள ஹைமாஸ்ட் தெருவிளக்குகள் ரூ. 0.49 கோடி செலவில் அமைக்கப்பட்டது.

வார்டு குழு அலுவலகம் எண். 4, வார்டு எண். 65, மொராய்ஸ் சிட்டிப் பகுதியில் புராதனமுறையிலான தெருவிளக்குகள் ரூ.0.55 கோடி செலவில் அமைக்கப்பட்டது. மேலும், அனைத்து 20 வாட்ஸ் எல்இடி விளக்குகளும் படிப்படியாக அகற்றப்பட்டு, 40 வாட்ஸ் எல்இடி விளக்குகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 21. பொது விநியோக கடைகள் பணி

வார்டு குழு அலுவலகம் எண். 4, வார்டு எண். 58, காந்திநகர் பொதுவிநியோக கடையினைச் சுற்றிலும், கடையின் பாதுகாப்பு கருதி ரூ. 0.11 கோடி செலவில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டது. வார்டு குழு அலுவலகம் எண்.1, வார்டு எண்.8, பழனியப்பா நகர் பொதுவிநியோக கடையில் ரூ. 0.04 கோடி செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

## 22. சமுதாயக் கூடம் கட்டும் பணி

வார்டு குழு அலுவலகம் எண்.1, வார்டு எண்.6, தாகூர் தெருவில் ரூ.0.84 கோடி மதிப்பீட்டில், ஏழை எளிய மக்கள் தங்களுடைய சிறு குடும்ப விழாக்களை நடத்திக் கொள்ள வசதியாக சமுதாயக் கூடம் கட்டப்பட்டு, 07-01-2026 முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.




**23.** <u>புதிய வாகனம் கொள்முதல் செய்யும் பணி</u>

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுமக்கள் பயன்பாட்டிற்கென 2 நடமாடும் கழிவறைகள் (5+5 இருக்கைகள்) கொண்ட வாகனம் ரூ.0.22 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு,பயன்பாட்டில் உள்ளது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மரக்கிளைகள், சாலைகளில் centre median-ல் உள்ள தேவையற்ற ஒயர்கள், மாநகராட்சி பகுதிகளில் அனுமதியற்ற விளம்பர பதாகைகளை அகற்றுவதற்கும் மற்றும் மாநகராட்சி அலுவலக கட்டிடங்களில் உள்ள மின்சாதன பொருட்களை பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் Truck mounted Lift platform vehicle – 1 எண்ணிக்கை புதிதாக வழங்கும் பணி ரூ.0.41 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.



## கல்வி நிதி

வார்டு குழு – IV, வார்டு எண்.57க்குட்பட்ட ராஜிவ் காந்தி நகரில் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி ரூ.18.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.



வார்டு குழு – V, வார்டு எண்.55க்குட்பட்ட பிராட்டியூர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் ரூ.4.85 கோடி மதிப்பீட்டில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் புதிதாக கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.



வார்டு குழு – V, வார்டு எண்.09க்குட்பட்ட மருத்துவமனை சாலையில் ரூ.3.05 கோடியில் முதல்வர் படைப்பகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

வார்டு குழு – V, வார்டு எண்.29க்குட்பட்ட அக்பர் தெருவில் ரூ.6.60 கோடியில் புதிதாக மாநகராட்சி நடுநிலைப் பள்ளி கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி தொடங்கும் நிலையில் உள்ளது.




திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கட்டிடங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்களில் 2025-26ஆம் நிதியாண்டியில் மொத்தம் 21 பணிகள் ரூ.13.42 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவற்றில் 7 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

## பள்ளி மேம்பாட்டு நிதி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கட்டிடங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்களில் 2025-26ஆம் நிதியாண்டில் மொத்தம் 39 பணிகள் ரூ. 9.24 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவற்றில் 4 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

# பொது சுகாதாரம்

➢ டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம்:

டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகள் மற்றும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை பெற்று பிரசவிக்கும் தாய்மார்களுக்கு ரூ.18,000/. (ரூ.14,000/. வங்கி கணக்கில் ரொக்கமாகவும், ரூ.4,000/- மதிப்புள்ள தாய் சேய் நல பெட்டகமாகவும்) வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் 10147 கர்ப்பிணி பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.



➢ புற நோயாளிகள் சிகிச்சை:

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் 20 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 36 நகர் நல மையங்களிலும், சுமார் 1643425 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது. மேலும், 3 சித்த மருந்தகங்கள் மூலம் சுமார் 47596 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு சித்த மருந்துகள் வழங்கப்பட்டது.

| வ. எண். | விவரம் | மருந்தகங்கள்/ மையங்களின் எண்ணிக்கை | சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் | 20 | 1643425 |
| 2. | நகர் நல மையங்கள் | 36 | |
| 3. | சித்த மருந்தகங்கள் | 3 | 47596 |

## நோய் தடுப்பு நடவடிக்கைகள்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 65 வார்டுகளிலும் பொதுசுகாதார பணிகள் மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு மற்றும் கொசு ஒழிப்பு புகை மருந்துகள் போன்ற கிருமி நாசினிகள் ரூ.0.97 கோடியில் நடப்பாண்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டது.



## டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை:

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட 65 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. டெங்கு காய்ச்சல் குறித்த துண்டு பிரசுரங்கள், அறிவிப்புகள் மற்றும் விளம்பர பதாகைகள் வாயிலாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இம்மாநகராட்சிக்குட்பட்ட வீடுகள் தோறும் கொசுப்புழு ஆதார நிலை ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள இம்மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவு அலுவலர்கள், மற்றும் அலுவலர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு, ஒரு வார்டு குழுவிற்கு 50 தற்காலிக தினக்கூலிப் பணியாளர்கள் வீதம் ஐந்து வார்டு குழு அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 250 பணியாளர்கள் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு, டெங்கு கொசுப்புழு ஆதார நிலைகள் கண்டறிந்து அழிக்கப்பட்டது.

இம்மாநகராட்சியின் 65 வார்டுகளில் அனைத்து பகுதிகளிலும் டெங்கு நோய் பரவல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

டெங்குகொசு வளர்வதற்கு ஏதுவாக உள்ள ஆதாரங்களை கண்டறியும் இடங்களில் சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து அபராதக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து நடவடிக்கைகளால் டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## ABC / ARV பணிகள் :

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களின் எண்ணிக்கை கணக்கெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் 43767 தெருநாய்கள் உள்ளதாக கணக்கெடுப்பு அறிக்கை பெறப்பட்டது.



திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 65 வார்டுகளில் தெருநாய்களின் பெருக்கெடுத்த எண்ணிக்கையால் பொதுமக்கள் அதிக அளவில் பாதிப்பு அடைந்ததை தொடர்ந்து, இப்பணியின் அவசர அவசியம் கருதி இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் 43767 தெருநாய்களில் 28449 நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 33449 தெரு நாய்களுக்கு ரேபீஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இப்பணிக்காக நடப்பு நிதி ஆண்டில் இதுவரை ரூ.1.65 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால், இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருநாய்களின் எண்ணிக்கை பெருகுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.



➢ "நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்" சிறப்பு மருத்துவ முகாம்கள்:

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களைத் தேடிச் சென்று மருத்துவ வசதிகளை வழங்கும் வகையில், தமிழக அரசின் "நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்" சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. நகர்ப்புற மக்களுக்கு உயர்தர இலவச மருத்துவ சேவைகள் பொது மருத்துவம், கண், காது, பல், மனநலம், இதய நோய், தோல் நோய், மகப்பேறு, ஊட்டச்சத்து, இரத்த அழுத்தப் பரிசோதனைகள் உள்ளிட்ட பல்வேறு விதமான மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 6178 பயனாளிகள் பயனடைந்தனர்.




➢ திடக்கழிவு மேலாண்மை மற்றும் தூய்மை பணிகள்:

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 2,47,538 வீடுகள் மற்றும் 26000 வணிக நிறுவனங்களின் திடக்கழிவுகளை சேகரித்து நிர்ணயிக்கப்படும் இடத்தில் சேர்க்கும் பணிகள் வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1279.44 கி.மீ சாலைகள் மற்றும் 134 கி.மீ தெருக்களிலுள்ள சாலைகளில் துப்புரவு பணிகள் மற்றும் கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் பணிகள், தற்போது பணியில் உள்ள 819 நிரந்தர தூய்மை பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள MCC மையங்களில் மக்கும் குப்பைகளை உரமாக்கும் பணிகளை மேற்கொள்ளவும், RRC மையங்கள், BIO GAS PLANT மையங்கள், OCC மையங்கள், பேருந்து நிலையங்கள், பூங்காக்கள் ஆகிய இடங்களில் பொது சுகாதார பணிகளை வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 630 மனித ஆற்றல்களை கொண்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 90 பள்ளிகளில் (மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகள்) தூய்மை பணிகள் மேற்கொள்வதற்கு வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 94 மனித ஆற்றல்களை கொண்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2026-27ம் ஆண்டில் இதரத் திட்டங்களின் (Other Schemes) கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் பற்றிய விவரம்

1. **தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி TURIP-2025-26**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டதினால் சேதமடைந்த தார்ச்சாலைகளை, சீரமைக்க ரூ. 64.56 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளது.

2. **ஆறாவது மாநில நிதிக்குழு மான்யம்**

ஆறாவது மாநில நிதிக்குழு மான்யம் மூலம் பெறப்படும் மான்யத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் மற்றும் புதைவடிகால் வழங்கும் திட்டத்திற்காக சேதப்படுத்தப்பட்ட சாலைகள் சீரமைக்கப்படும்.

3. **குடிநீர் ஆதாரம் மேம்படுத்தும் பணி**

கொள்ளிடம் ஆற்றில் நீராதாரத்தை பெருக்குவதற்கு தேவையான குடிநீர் சேகரிப்பு கிணறு மற்றும் மோட்டார்கள் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள உரிய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, அரசின் மான்யம் பெற்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4. **புதைவடிகால் உந்து நிலையங்கள் மேம்படுத்தும் பணி.**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ள அனைத்து புதைவடிகால் உந்து நிலையங்கள் மற்றும் ஏற்ற நிலையங்களில் உள்ள மோட்டார்கள் அமைக்கப்பட்டு, பல வருடங்கள் கடந்துவிட்டபடியால், ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் அனைத்து மோட்டார்களையும் புதிதாக அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, அரசின் மான்யம் பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

5. **வெள்ள கால்வாய்கள் புனரமைக்கும் பணி.**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் செல்லும் அனைத்து வெள்ள கால்வாய்களின் கரைகளை பலப்படுத்தி, மழைக்காலங்களில் வெள்ளம் வருவதினை தடுக்கும் பொருட்டு ரூ.100.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அரசு மான்யம் பெற்று பணிகள் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

6. **தரைமட்ட சூரிய ஒளி மின் நிலையம் அமைக்கும் பணி**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பஞ்சப்பூர் பகுதியில், மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில், அரசின் நிதியின் கீழ் மேற்கொள்ள கட்டம் 3ல் சுமார் 30 ஏக்கர் பரப்பளவில், ரூ.65.00 கோடி மதிப்பீட்டில் 9.60 MWp திறன் கொண்ட தரைமட்ட சூரிய ஒளி மின்

நிலையம் அமைக்கும் பணி மற்றும் கட்டம் 4ல், சுமார் 16.54 ஏக்கர் பரப்பளவில், ரூ.49.00 கோடி மதிப்பீட்டில் 7.20 MWp திறன் கொண்ட தரைமட்ட சூரிய ஒளி மின் நிலையம் அமைக்கும் பணியும், மேலும் வார்டுக்குழு அலுவலகம் எண்.2 அலுவலக கட்டிடத்தில் ரூ.0.80 கோடி மதிப்பீட்டில் 100 KWp திறன் கொண்ட சூரிய ஒளி மேற்கூரை அமைக்கும் பணியும் மேற்கொள்ள அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

## 7. நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம்

ஜெர்மானிய வங்கி நிதியுதவியுடன் "நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின்" கீழ், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்வதற்கு அரசுக் கடிதம் எண்.517/மாந2/2026 நாள்.27-01-2026ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ரூ.கோடியில்)

| வ. எண். | பணியின் பெயர் | SMIF மான்யம் | கடன் | CGF மான்யம் | மாநகராட்சி பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | காவிரிநதிக் கரை அபிவிருத்தி | 17.66 | 17.66 | 7.57 | 7.58 | 50.47 |
| 2. | கொட்டப்பட்டு குளம் அபிவிருத்தி | 10.96 | 10.96 | 4.69 | 4.70 | 31.31 |
| | மொத்தம் | 28.62 | 28.62 | 12.26 | 12.28 | 81.78 |

வரிசை எண்.1ல் குறிப்பிட்ட பணி முடிவுற்றவுடன் ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் 5 வருடங்களுக்கு மாநகராட்சி நிதி மூலம் பராமரிப்பு செய்யப்படும்.

வரிசை எண்.2ல் குறிப்பிட்ட பணி முடிவுற்றவுடன் ரூ.2.32 கோடி மதிப்பீட்டில் 5 வருடங்களுக்கு மாநகராட்சி நிதி மூலம் பராமரிப்பு செய்யப்படும்.

## 8. மாநில நிதிக்குழு மான்யம் - நகர்ப்புற சாலை வளர்ச்சித் திட்டம் - சேமிப்புநிதி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண். 5 6 க்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட விவரப்படி புதிதாக தார் சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு, உரிய மான்யம் பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளது.

| வ. எண் | திட்டப்பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.56க்குட்பட்ட இரட்டை மலை கோவில் பிரதான சாலையில் 2.00 கி.மீ நீளத்திற்கு மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் தார் சாலை அமைக்கும் பணி | 2.47 |
| | மொத்தம் | 2.47 |

## 2026–27 ஆம் ஆண்டில் மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள்

### பொதுநிதி

மாநகராட்சியின் நிதிநிலைமைக்கேற்ப கீழ்க்கண்ட பணிகள் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

1. சாலைகள்

மாநகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள மண்சாலைகளை படிப்படியாக தார்சாலைகளாகவும், சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகவும், பேவர் ப்ளாக்குகள் பொருத்தப்பட்ட சாலைகளாகவும் மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சாலைப் பணிகளை நடப்பாண்டில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. மழைநீர் வடிகால் அமைத்தல்

மாநகராட்சியின் 65 வார்டுகளிலும், சுமார் 52.00 கி.மீ நீளத்திற்கு புதிதாக மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் கட்டுதல் போன்ற பணிகளை ரூ.32.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3. மாநகராட்சி மைய அலுவலகம் கட்டும் பணி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ள மைய அலுவலகம் கட்டிடம், நகரத்தில் பெருகிவரும் மக்கள் தொகைக்கு உரிய சேவைகள் வழங்குவதற்கு போதுமானதாக இல்லை. எனவே, அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய ஒரு கட்டிடம், மாமன்ற கூட்டரங்கம் உட்பட, ரூ.75.00 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4. மியாவாகி காடுகள் அமைக்கும் பணிகள்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புவி வெப்பமயமாவதை குறைக்கும் பொருட்டு மியாவாகி காடுகள் தலா ரூ.1.50 கோடி மதிப்பீட்டில், இட வசதிக்கேற்ப 10 இடங்களில் மொத்தம் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. பாலம் கட்டும் பணி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டல அலுவலகம் எண்.4 வார்டு எண்.54க்குட்பட்ட ராஜா காலனி பகுதியில் உய்யகொண்டான் வாய்க்கால் குறுக்கே மோட்டார் வாகனங்கள் செல்லும் வகையில் பாலம் அமைக்கும் பணியினை ரூ.1.29 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.40454/2023/மாநஅ-2 நாள்.11.03.2024ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது.

இப்பாலத்தின் மைய பகுதியில் தூண்கள் இல்லாத பாலம் அமைப்பதற்கு திருத்திய மதிப்பீடு ரூ.1.70 கோடிக்கு தயார் செய்து உரிய அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கு முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெற்று பொதுநிதியின் கீழ் இப்பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 6. சிறியரக நீர்தெளிப்பான் லாரிகள் கொள்முதல் செய்யும் பணி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு பகுதிகளில் உள்ள சிறிய சாலை ஓரங்களில் சேகரமாகியுள்ள மண்துகள்களை சாலை சுத்தம் செய்யும் வாகனம் மூலம் அப்புறபடுத்துவதற்கு முன்னதாக சாலைகளில் நீர் தெளிப்பதற்கு தேவையான 6000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர் தெளிப்பான் வாகனம் (Water sprinkler Vehicles) - 5 எண்ணிக்கைகள் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் புதிதாக கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.



## 7. நாய்கள் பயணிக்கும் வாகனம் கொள்முதல் செய்யும் பணி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பொதுமக்களுக்கு இடையூராக தெருக்களில் சுற்றிதிரியும் நாய்களை பிடித்து சென்று விலங்கு பிறப்பு கட்டுப்பாடு (ABC) பணி மேற்கொள்வதற்கு ஏதுவாக நாய்கள் பயணிக்கும் வாகனம் 2 எண்ணிக்கைகள் ரூ.0.30 கோடி மதிப்பீட்டில் புதிதாக கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 8. காற்றின் தரத்தினை கண்காணிக்கும் கருவிகள் பொருத்துதல்

இம்மாநகராட்சியில் காற்றின் தரத்தினை கண்காணித்து, மாசிருப்பின் அதனை தவிர்ப்பதற்கு தேவையான மேல்நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, நகரின் முக்கியமான 10 பகுதிகளில் காற்றின் தரத்தினை கண்காணிக்கும் கருவிகள் (Air Quality Monitoring Devices) பொருத்தப்படும்.

## 9. மன்னார்புரம் ரவுண்டானா அழகுப்படுத்தும் பணி

டி.வி.எஸ் டோல்கேட் ரவுண்டானா தரத்திற்கு இணையாக, மன்னார்புரம் ரவுண்டானாவும் தனியார் நிறுவனங்களின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியின் (Corporate Social Responsibility Fund) மூலம் உரிய நிதி பெறப்பட்டு சுமார் ரூ.0.60 கோடி மதிப்பீட்டில் அழகுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.



மேற்கண்ட 2025-26ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2026-27ம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு தயாரித்த பொழுது ஏற்பட்ட பற்றாக்குறையினை (திருத்திய மதிப்பீட்டிற்கான பற்றாக்குறை ரூ.85.67 கோடி மற்றும் திட்ட மதிப்பீட்டிற்கான பற்றாக்குறை ரூ.106.75 கோடி ஆக மொத்தம் ரூ.192.42 கோடி) கீழ்க்கண்ட விவரப்படி மாநகராட்சிக்கு வரவேண்டிய மான்யம் மற்றும் நிலுவை கேட்புத் தொகை மூலம் ஈடு செய்யப்படும்.

| வ. எண் | விவரம் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | 2025-26ம் ஆண்டிற்கான நிலுவை கேட்பு | 120.00 |
| 2. | 2025-26ம் ஆண்டிற்கான முத்திரை தாள் தீர்வை நிலுவை | 24.00 |
| 3. | 15வது நிதிக்குழுவின் திடக்கழிவு மேலாண்மைக்காக பெறப்பட வேண்டிய மான்யம் நிலுவை | 21.00 |
| 4. | 2026-27ம் ஆண்டில் 7வது மாநில நிதிக்குழு மூலம் கூடுதலாக எதிர்பார்க்கப்படும் மான்யம் | 27.00 |
| | மொத்தம் | **192.00** |

# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி:
# காலநிலை வரவு–செலவுத் திட்ட அறிக்கை
# (2026–2027)

திருச்சிராப்பள்ளி மாநகரத்தின் சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டெடுக்கவும், நீண்டகாலப் பருவநிலை மீள்தன்மையை உருவாக்கவும் "காலநிலை நிதிநிலை அறிக்கை 2026-27" (Climate Budget 2026-27) தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் நகரின் நீர்வள மேலாண்மை, பசுமைப் போர்வை விரிவாக்கம், கழிவு மேலாண்மை மற்றும் வெப்பத் தணிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்த இலக்கு கொண்டுள்ளது.

## காலநிலை மீள்தன்மை மற்றும் வெள்ளத் தடுப்பு மேலாண்மை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தற்போது உள்கட்டமைப்பு மேம்பாட்டிலிருந்து, காலநிலைக்கு ஏற்ற பாதுகாப்பான நகரமாக மாறும் இலக்கை நோக்கி நகர்ந்துள்ளது. கடந்த காலங்களில் ரூ.1200.00 கோடிக்கும் அதிகமான நிதி மூலதன திட்டங்களில் முதலீடு செய்யப்பட்ட நிலையில், தற்போது அந்தச் சொத்துக்களைப் பாதுகாக்கும் வகையில் காலநிலை தழுவல் (Climate Adaptation) பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் தற்போதைய நிதி ஒதுக்கீட்டில் 85% அடிப்படை வசதிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டாலும், ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் நிதியானது 100% பயோ-மைனிங் (Bio-mining) மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகளுக்காகத் திருப்பப்பட்டுள்ளது. குறிப்பாக, ரூ.100 கோடி மதிப்பில் வடிகால் கால்வாய்களைப் பலப்படுத்துதல் மற்றும் ரூ.32.50 கோடி மதிப்பில் 52 கி.மீ நீளத்திற்கு புதிய மழைநீர் வடிகால்களை அமைப்பதன் மூலம், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் திடீர் வெள்ள அபாயத்திலிருந்து நகரத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் 100% உறுதி செய்யப்பட்டுள்ளன.

## வெப்பத் தணிப்பு மற்றும் பசுமை ஆற்றல் மாற்றங்கள்

நகரத்தின் வெப்ப அழுத்தத்தைக் (Heat Stress) குறைப்பதைக் கருத்தில் கொண்டு, அரசு பள்ளிகள் மற்றும் பொதுக் கட்டிடங்களில் 'கூலிங் ரூபிங்' (Cool Roofing) முறை மற்றும் சூரிய மின்சக்தி பயன்பாடு 950% அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற ஏழை எளிய மாணவர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, ரூ.10.45 கோடி மதிப்பிலான பள்ளி மறுசீரமைப்புப் பணிகளில் காலநிலை உணர்திறன் கொண்ட வடிவமைப்புகள் (Climate-sensitive designs) கட்டாயமாக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் 10 இடங்களில் உருவாக்கப்படும் மியாவாகி காடுகள் மற்றும் பஞ்சப்பூர் சூரிய மின்சக்தி நிலையங்கள் மூலம் கார்பன் உமிழ்வைக் குறைத்து, நகரத்தின் வெப்பநிலையைக் கட்டுக்குள் வைக்கும் 'பசுமைப் போர்வை' திட்டங்கள் 100% முன்னுரிமையுடன் செயல்படுத்தப்படவுள்ளது.

## கழிவு மேலாண்மை மற்றும் குறைந்த கார்பன் ஆளுமை

நிர்வாக ரீதியாக, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி குறைந்த கார்பன் தடயத்தை (Low Carbon Footprint) இலக்காகக் கொண்டு 100% டிஜிட்டல் ஆளுமைக்கு மாறியுள்ளது. பஞ்சப்பூர் லாரி முனையத்தில் சுமார் ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், வாகனங்களின் தேவையற்ற இயக்கத்தைக் குறைத்து

எரிபொருள் சிக்கனத்தை உறுதி செய்கின்றன. அரியமங்கலம் குப்பை கிடங்கில் மேற்கொள்ளப்படும் பயோ-மைனிங் பணிகள் மற்றும் 100 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் மீத்தேன் உமிழ்வு தடுக்கப்பட்டு,நீர்நிலைகள் பாதுகாக்கப்படுகின்றன.

காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்தும் நோக்கில், கீழ்க்கண்ட பணிகள் மேற் கொள்ளப்பட உள்ளன:

## I. நீர்நிலைமேம்பாட்டுப்பணிகள்

1. **கொட்டக்குளம் ஏரி புனரமைப்பு**: காலநிலை மாற்றத்திற்கான கூறுகள் (மிதக்கும் தாவர வகைகளை கொண்ட திட்டுகள், காற்றோட்ட இயந்திரங்கள், மரக்கன்றுகள் நடுதல் போன்றவை) உட்பட மொத்தம் ரூ. 31.31 கோடி மதிப்பில் ஏரி புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இத்திட்டத்திற்கு SMIF-TN-III திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்படும்: இதில் ரூ.10.96 கோடி கடனாகவும், ரூ. 10.96 கோடி மானியமாகவும் வழங்கப்படும். மூலதன மான்ய நிதி (CGF) பங்களிப்பு ரூ. 4.69 கோடியாகும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு (ULB)பங்களிப்பு ரூ.4.70 கோடியாகவும், அதில் ரூ. 2.32 கோடி இயக்கம் மற்றும் பராமரிப்பு (O&M) செலவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

2. **முக்கிய ஏரிகள் மற்றும் நீர்நிலைகளில் மிதக்கும் தாவர திட்டுக்கள் அமைத்தல்**: நகரின் முக்கிய ஏரிகள், குளங்கள் மற்றும் கால்வாய்கள் நேரடி மற்றும் மறைமுக மாசுபாடு, குறைந்த ஆக்சிஜன் அளவு, உயிரினப் பல்வகைமையின் குறைவு மற்றும் பாசி அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பிரச்சினைகளை சமாளிக்க, நீர்நிலைகளில் மிதக்கும் தாவரங்களை கொண்ட திட்டுகள் அமைக்க திருச்சிராப்பள்ளி மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் நீரை இயற்கை முறையில் சுத்திகரிப்பதுடன், உயிரினப் பல்வகைமையை மேம்படுத்தவும் உதவும்.

3. **கால்வாய்களில் மிதக்கும் தாவர திட்டுக்கள் நிறுவுதல்**: கால்வாய்களில் மிதக்கும் ஈரநிலைகள் அமைக்கப்பட உள்ளன. இதன் மூலம் நீர் மாசுபாடு குறைக்கப்பட்டு, உயிரினங்களுக்கு இயற்கை வாழிடங்கள் உருவாக்கப்படுவதுடன், பாசி பெருக்கமும் கட்டுப்படுத்தப்படும். நகரின் 10 இடங்களில் நீர்நிலைப் பகுதிகளை அமைக்க ரூ.94.40 லட்சம் மதிப்பீட்டில் உரிய மான்யம் பெற்று மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

4. **மிதக்கும் ஏரேட்டர்கள் நிறுவுதல்**: மாவடிகுளம், செட்டிகுளம், செங்குளம், சித்தம்பூர் மற்றும் வாத்தியார் குளம் போன்ற முக்கிய ஏரிகளில் மிதக்கும் காற்றோட்ட இயந்திரங்கள் அமைக்கப்பட உள்ளன. இதன்மூலம் ஏரிகளில் ஆக்சிஜன் அளவு மேம்படுத்தப்பட்டு, பாசிபெருக்கம் கட்டுப்படுத்தப்படுவதுடன், நீர்மாசுபாடும் குறைக்கப்படும். இப்பணியினை ரூ. 4.20 கோடி மதிப்பீட்டில் உரிய மான்யம் பெற்று மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

5. **குப்பைத் தடுப்புகளை நிறுவுதல்:** ஏரிகள் மற்றும் கால்வாய்களில் உள்ள நீர்நிலைகளுக்குள் திடக்கழிவுகள் புகுவதைத் தடுக்கும் வகையில், கழிவு நுழைவு பகுதிகளில் குப்பை தடுப்புகள் (Trash Barriers) அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நீரோட்டம் அடைபடுதல் போன்ற பிரச்சினைகள் தவிர்க்கப்படும்.

**ரெட்டை வாய்க்காலில் குப்பை தடுப்புகள் அமைத்தல்** : அலங்கநாதபுரம் SBM கழிப்பிடம் அருகில், தேவர்பூங்கா அருகில் மற்றும் தஞ்சாவூர் பைபாஸ் அருகில் ரூ.2.38 லட்சம் செலவில் குப்பை தடுப்புகள் அமைக்கப்பட உள்ளன.

## II. காற்றுத் தரத்தை மேம்படுத்தல் மற்றும் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை விரிவுபடுத்தல்

6. **மின்சார வாகன மின்னேற்ற நிலையங்கள் அமைத்தல்**: நகரில் மின்சார வாகனங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால், திருச்சியில் மின்னேற்ற நிலையங்களின் எண்ணிக்கையினை விரிவுபடுத்தும் தேவையுள்ளது. நகரின் 10 இடங்களில் மின்சார வாகன மின்னேற்ற நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையங்கள் ஒப்பந்தபுள்ளிகள் பெற்று நிறுவப்படும்; நில ஒதுக்கீடு, தளத்தயாரிப்பு மற்றும் மின்சார இணைப்பு ஏற்பாடுகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு மேற்கொள்ளும். இத்திட்டத்தினை ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7. **காற்றுத்தர கண்காணிப்பு அமைப்புகள் நிறுவல்** : காற்றின் தரக்கட்டுப்பாடு அளவுகோலின்படி, திருச்சிராப்பள்ளி நகரில் தற்போது 5 சாதாரண கண்காணிப்பு நிலையங்களும், 1 தொடர்ச்சியான சுற்றுப்புற காற்றுத்தர கண்காணிப்பு நிலையமும் செயல்பட்டு வருகின்றன. நகரின் நெரிசல் மற்றும் முக்கிய பகுதிகளில் நச்சுவாயுக்கள் ($NO_2$, CO, $CO_2$, $O_3$, $SO_2$), தூசிதுகள்கள் (PM2.5, PM10), வெப்பநிலை, ஈரப்பதம், மழைப்பொழிவு, காற்றின் வேகம் மற்றும் திசை, சத்தம் ஆகியவற்றை அளவிட புதிய கண்காணிப்பு நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தம் 10 காற்றுத்தர கண்காணிப்பு நிலையங்களை நிறுவ ரூ.35.54 லட்சம் (நிறுவல் மற்றும் செயல்படுத்தல் செலவுகள் உட்பட) மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## III. ஆற்றல் செயல்திறன் மேம்பாடு மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டை விரிவுபடுத்தல்

8. **எரிசக்தி பயன்பாட்டு ஆய்வுகளை மேற்கொள்ளல்**: எரிசக்தி பயன்பாட்டை கண்காணிக்க தனித்தனி கண்காணிப்பு பலகை உருவாக்கும் பணியினை ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## IV திடக்கழிவுமேலாண்மை:

9. **திடக்கழிவுமேலாண்மை:** நகரம் முழுவதும் கழிவு மாசுபாடு மற்றும் குப்பை சிதறலைத் தடுக்கும் நோக்கில், சுற்றுச்சுழற்சி பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இம்முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. குப்பை அகற்றும் இடங்களில் சேகரிக்கப்படும் கழிவுபொருட்கள், குப்பை தேங்கும் பாதிப்பு அதிகமான இடங்களை அழகுபடுத்த பயன்படுத்தப்படும். 30 இடங்களில் இத்திட்டத்தை ரூ.7.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்தமாக ₹ 361.84 கோடி மதிப்பிலான காலநிலை பாதுகாப்பு திட்டங்களுடன், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கார்பன் சமநிலை கொண்ட (Carbon Neutral) எதிர்காலத்தை நோக்கி 100% அர்ப்பணிப்புடன் மாநகராட்சியின் நிதிநிலைக்கேற்ப செயல்படுத்தப்படும்.

## கல்வி நிதி

மாநகராட்சி பள்ளிகளில் தனியார் பள்ளிகளுக்கு இணையாக தரம் உயர்த்தி அதற்குரிய அபிவிருத்திப் பணிகள் 2026-27ல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாநகராட்சிப் பள்ளிகளில் மெய்நிகர் உண்மை ஆய்வகங்கள் (Virtual Reality Labs) அமைக்கப்படும். இதன் மூலம் மாணவர்களுக்கு கல்வி பயிலும் திறன் மேலும் ஊக்கவிக்கப்படும்.

தற்பொழுது தனியாருக்கு சொந்தமான இடங்களில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள், இடவசதிக்கேற்ப மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் முதற்கட்டமாக 10 மையங்கள் புதிதாக கட்டப்படும்.

## 2026-27ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்

(ரூபாய் கோடியில்)

| விபரம் | வருவாய் நிதி | குடிநீர் நிதி | மூலதன நிதி | NULM | NUHM | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| வரவு (அ) | 445.68 | 142.91 | 653.38 | 1.00 | 5.40 | 1248.37 |
| செலவு (ஆ) | 450.05 | 92.07 | 806.60 | 1.00 | 5.40 | 1355.12 |
| | | | | | பற்றாக்குறை (அ-ஆ) | (-) 106.75 |

## கல்வி நிதி

(ரூபாய் கோடியில்)

| விபரம் | 2026-27 திட்ட மதிப்பீடு |
|---|---|
| வரவு | 25.74 |
| செலவு<br>வருவாய் நிதி<br>செலவு – 7.52<br>மூலதன பணிகள் – 10.60<br>மொத்தம் – 18.12 | 18.12 |
| உபரி | 7.62 |

**மு.அன்பழகன்**
மாண்புமிகு மேயர்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

## 2025-2026ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2026-2027ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு

### சுருக்கம்

**வரவினங்கள்** (ரூபாய் கோடியில்)

| வ. எண் | இனம் | 2025-2026 (திட்ட மதிப்பீடு) | 2025-2026 (திருத்திய மதிப்பீடு) | 2026-2027 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|
